Registered as a Newspaper பக்கங்கள் 6 விலை ரூபா 5·00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி · PEOPLES DAILY

நாதம் 5 திருவள்ளுவர் ஆண்டு 2025 கார்த்திகை 08 24-11-94 வியாழக்கிழமை ஓசை 279

## சிறந்த மாவீரர் அலங்காரங்களுக்கு தமிழீழ நிர்வாகசேவை பரிசு

தமிழீழ மாவீரர் வாரத்தினையும், தினத்தையும் முன்னிட்டு தமிழீழ மக்களினால் ஆங்காங்கே வளைவுகளும் அலங்காரங்களும் செய்யப்பட்டு வெகு விமர்சையாகவும், எழுச்சியாகவும் அஞ்சலிகள் செய்து ஆசீர்வதித்து எல்லோருடைய மனங்களிலேயும் ஆழமாகப் பதித்து பூசித்துவரும் இவ் வேளையில் யாழ்ப்பாணக் குடாநாட்டில் ஆங்காங்கே காணப்படும் வளைவுகள் அலங்காரங்களுக்கும் பரிசு வழங்குவதற்கு தமிழீழ நிர்வாகசேவை திட்டமிட்டுள்ளது. இப் பரிசுத் திட்டத்தவன [6-ஆம் பக்கம் பார்க்க]

# சிறிலங்கா தூதுவரகம் முன்னால் இத்தாலியில் தமிழர் ஆர்ப்பாட்டம்

## புறக்கணிக்கப்படுவதாகக் குற்றச்சாட்டு

(கொழும்பு)

இத்தாலியின் தலைநகர் ரோமில் இருக்கும் சிறிலங்கா தூதுவரகத்திற்கு எதிரே அங்குள்ள தமிழர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தியுள்ளனர். சிறிலங்கா தூதுவரகத்தால் தாம பாரபட்சமாகவும், மாற்றாந்தாய் மனப்பான்மையுடனும் நடத்தப்படுவதாகக் கூறியே தமிழர் ஆர்ப்பாட்டம் நடத்தியிருக்கின்றனர். இவ் ஆர்ப்பாட்டத்தில் ஆயிரத்திற்கும் அதிகமானோர் பங்குபற்றியுள்ளனர்.

பாப்பரசர் புனித இரண்டாம் அருளப்பர் சின்னப்பரிடம் ஜனாதிபதி திருமதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் விசேட செய்தியொன்றைக் கையளிப்பதற்காக அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே ரோம் சென்றிருந்த சமயம் இவ் ஆர்ப்பாட்டம் இடம் பெற்றது குறிப்பிடத்தக்கது.

இரண்டு வருடங்களுக்கு முன்பு இத்தாலியிலுள்ள சிறிலங்கா தூதுவரகத்துக்கு எவரும் சுதந்திரமாக சென்று எந்த ஊழியரையும் சந்திக்க கூடியதாக இருந்தமையை சுட்டிக் காட்டியுள்ள ஆர்ப்பாட்டக்காரர்கள் தற்போதைய நிலை குறித்தும் விபரித்துள்ளனர். இங்குள்ள சிறிலங்கா தூதவரகத்தின் வாசற் கதவுகள் காலை 8.30 க்கு திறக்கப்படும் போதும், அலுவலக ஊழியர்கள் 10.30 க்கு பின்னரே வருவதாகவும் 12.30க்கு அலுவலகம் மூடப்பட்டு விடுவதாகவும் அவர்கள் கூறியுள்ளனர். அத்துடன் பிறப்பு பதிவு, விவாகப் பதிவு முதலாம் ஆவணங்கள் உத்தியோகபூர்வமாக மொழியாக்கம் செய்யப்படுவதற்கு ரூபா 650 வரையில் அறவிடப்படுவதாகவும், அவர்கள் தெரிவித்துள்ளனர். தினமும் 60 பேர் மட்டுமே தூதுவரக அலுவலகத்தினுள் அனுமதிக்கப்படுவதாகவும், அவர்களும் கடுமையான பாதுகாப்பு கெடுபிடிகளுக்கும் தேவையற்ற குறுக்கு விசாரணைகளுக்கும் உள்ளாவதாக தெரிய வருகிறது.

அனைத்து நாடுகளுக்கும் செல்லுபடியாகக் கூடிய விதத்தில் கடவுச்சீட்டை புதுப்பித்துக் கொள்வதற்கு மட்டும் 7000 ரூபாவரையில் இவ் அலுவலகத்தால் அறவிடப்படுவதாகவும் கூறப்படுகிறது.

## ஆதிவாசிகள் பொலிஸ் மோதல் 100பேர் பலி

மகாராஷ்டிரா மாநில நாக்பூரில் பொலிசாரின் தடைகளை மீறிச் செல்ல முயன்ற ஆதிவாசிகளுக்கும் பொலிசாருக்கும் இடையேயான மோதலில் நூற்றுக்கும் அதிகமானோர் உயிரிழந்தனர் மேலும் பதினைந்துக்கும் அதிகமானோர் படுகாயமடைந்துள்ளனர் நேற்று மாலை ஏழு மணியளவில் இடம்பெற்ற இச் சம்பவம் பற்றி மேலதிக விபரங்கள தெரியவரவில்லை.

## மாவீரர் நினைவுப் பந்தல்களில் மின்விளக்கு அலங்காரம்

(யாழ்ப்பாணம்)

மாவீரர் நாளையொட்டி யாழ்குடாநாடு முழுவதும் அமைக்கப்பட்டுள்ள மாவீரர் நினைவுப் பந்தல்கள், கேந்திர நிலையங்களிலுள்ள மாவீரர் நினைவு வளைவுகள் என்பன மின் அலங்காரங்களினால் பொலிவு பெற்று விளங்குகின்றன.

மாவீரர் நினைவுப்பந்தல்களும் அவற்றைச் சூழவுள்ள பகுதிகளும் மின் ஒளியினால் பட்டப்பகல் போல காட்சியளிக்கிறது தவிர கேந்திர இடங்களில் அமைக்கப்பட்டுள்ள மாவீரர் வளைவுகளும் மின் அலங்காரம் செய்யப்பட்டுள்ளன.

கோப்பாய் மாவீரர் துயி [6ஆம் பக்கம் பார்க்க]

## இரண்டாம் கட்டப் பேச்சிற்கு இதுவரை எந்த முயற்சியும் இல்லை

சமாதானப் பேச்சுவார்த்தையின் இரண்டாம் கட்டம் தொடர்பாகவோ அல்லது அதற்கு முன்னர் நடைபெற வேண்டிய ஆலோசனை மற்றும் திட்டமிடல் தொடர்பாகவோ இதுவரையில் எந்த முயற்சியும் மேற்கொள்ளப்படவில்லை என முதலாம் கட்ட பேச்சுக்களில் கலந்துகொண்ட

நவீன்குணரட்னா

கட்டடக் கலைஞரான நவீன் குணரட்னா தெரிவித்துள் ( 6 ஆம் பக்கம் பார்க்க )

## ஐ.தே.க. கால அரசியற் கொலைகள் விசாரிக்க ஜனாதிபதி ஆணைக்குழு

(கொழும்பு)

வன்செயல்கள் உச்சம் பெற்றிருந்த சமயத்தில் இடம் பெற்ற அரசியல் கொலைகள் மற்றும் காணாமற் போனவர்கள் தொடர்பாக ஆராய ஜனாதிபதி ஆணைக்குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இவ்வாறு நீதி, வெளிநாட்டு வர்த்தம், அரசியலமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி. எல், பீரிஸ் தெரிவித்தார்.

இத்தகையதொரு ஆணைக் குழுவை அமைக்க பொதுஜன ஐக்கிய முன்னணி அரசு முற்பட்டபோது முன்பு ஜனாதிபதி விஜேயதுங்கா ஒத்துழைப்பு வழங்க மறுத்து இதற்கான ஆவணங்களில் கைச்சாத்திடாதது தெரிந்ததே. இதனால் பிரதமருக்கு இந்த ஆணைக்குழுவை அமைக்க அனுமதி வழங்கும் வகையில் சட்ட திருத்தம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட இருந்தது. ஆனால் இதற்கான அவசியம் இப்போது இல்லை எனவும் பேராசிரியர் பீரிஸ் குறிப்பிட்டார்.

கனடியத் தூதுவருடன் அரசு மேற்கொண்ட பேச்சுவார்த்தைகளின் பெறுபேறாக காணாமற் போன மற்றும் கொலையுண்டவர்களுக்கான நட்டஈடு வழங்குவதற்காக 17 மில்லியன் ரூபா பெறப்படடிருப்பது குறிப்பிடத்தக்கது

இதற்கான விசாரணைகளை மேற்கொள்வதற்கு மூன்று தனித் தனிக் குழுக்கள நியமிக்கப்பட்டுள்ளது எனவும் பேராசிரியா பீரிஸ் மேலும தெரிவித்தார்.

மேல் மாகாணம், வடமேல் (6ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்புக் காட்டுப் பகுதியில் இராணுவம் பாரிய நடவடிக்கை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள காட்டுப் பகுதிகளில் சிறிலங்கா இராணுவத்தினர் பாரிய இராணுவ நடவடிக்கையொன்றை ஆரம்பித்துள்ளனர்.

நேற்று முன்தினம் பெருந்தொகையான இராணுவத்தினர் காடுகளின் எல்லைப் புறங்களில் குவிக்கப்பட்டு காடுகளுக்குள் ஊடுருவியுள்ளதாக கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இவ்வாறு குவிக்கப்பட்டுள்ள இராணுவத்தினர் புலுட்டமான் ஓடை, தொப்பிக்கலை பிரதேசம் சந்திவெளித்திடல், தஞ்ச ஆற்று, பெண்டுகள் சேனை ஆகிய பிரதேசங்களினூடாகவே தமது இராணுவ நடவடிக்கைகளை பெரும் எடுப்பில் மேற்கொண்டு வருவதாக அச் செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன;

## சமாதானத்தீர்வு முயற்சியே அரசாங்கத்தின் முக்கிய குறிக்கோள்

### பிரதி அமைச்சா சந்திரசேகரன்

(கொழும்பு)

வடக்குக் கிழக்கு இனப்பிரச்சினையை தீர்ப்பதற்கு சமாதான முயற்சியில் ஈடுபடுவதே அரசாங்கத்தின் முக்கிய நோக்கம் என்று பொது வசதிகள். தோட்டத்துறை வீடமைப்பு பிரதி அமைச்சர் பி. சந்திரசேகரன் தெரிவித்துள்ளார்;

லண்டன் பி. பி. சிக்கு அளித்த பேட்டியில் இக்கருத்தை அவர் தெரிவித்துள்ளார். தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில் காமினி திசாநாயக்காவின் கொலை, மற்றும் ஜனாதிபதிதேர்தல் சமாதான முயற்சிகளில் சில பின்னடைவுகளை ஏற்படுத்தியதாகவும் இருந்த போதும் தற்போது அத்தடைகளைக் கடந்து சமாதான முயற்சிகளை முன்னெடுத்து செல்ல அரசாங்கம் தீர்மானித்து இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

யுத்தம் ஒன்று நடைபெறும் போது ஏற்படும் சில சம்பவ [6-ம் பக்கம் பார்க்க]

## கிழக்கு மாகாண கிராமங்களில் இராணுவ அட்டூழியம் தொடர்கிறது

கிழக்குமாகாணத்தில சிறிலங்கா இராணுவத்தினரதும், விசேட அதிரடிப்படையினரதும் வெறியாட்டங்கள் தொடர்வதாக அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

அம்பாறை மாவட்டம் அக்கரைப்பற்று தமிழ்ப் பிரதேசங்கள் அனைத்தும் விசேட அதிரடிப்படையினரால் சுற்றி வளைக்கப்பட்டு, அங்கிருந்த மக்கள் கைது செய்யப்பட்டனர். கடந்த 21-ம் திகதி இடம்பெற்ற இச் சம்பவத்தின் போது பொதுமக்கள் அனைவரும் அடித்து துன்புறுத்தப் பட்டபின்னா விடுவிக்கப்பட்டனர்.

அம்பாறைமாவட்டம் அக்கரைபபற்று கோளாவில்வடக்கில் கடந்த 20-ம் திகதி பொதுமகன் ஒருவரின் வீட்டை விசேட அதிரடிப்படையினர் ( 6 ஆம் பக்கம் பார்க்க )

## தடுத்து வைக்கப்பட்டோரை செஞ்சிலுவை பார்வையிடும்

[வடமராட்சி]

பலாலி சிறிலங்கா இராணுவ முகாமுக்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினர் நேற்று சென்றுள்ளனர்.

இவர்கள் பலாலி மற்றும் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்குச்சென்று அங்கு தடுப்புக்காவலில் உள்ளோரை பார்வையிடுவர். இப் பகுதிகளுக்குச்சென்ற இக்குழுவினர் இன்று மீண்டும் திரும்பி வருவர் என அறியப்படுகிறது. [யோ]

## ராஜீவ் காந்தி கொலை விசாரணை

## மட்டக்களப்பு வாசி பொலிசாரால் இந்தியா கொண்டு செல்லப்பட்டார்

ராஜீவ் காந்தி கொலை தொடர்பாக விசாரணை மேற்கொண்டுவரும் இந்தியப் பொலிசார் சிறிலங்கா அரசின் உதவியுடன் மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த ஒருவரை இந்தியாவுக்கு அழைத்துச் சென்றிருப்பதாக தெரியவருகிறது.

விசாரணைக்கென கொண்டுசெல்லப்பட்டவர் சுமார் ஐம்பது வயதானவர் எனக் கூறப்படுகிறது. இவர் விவாகப் பதிவாளராக கடமையாற்றி வந்துள்ளார். புலனாய்வு குழுவினரில் சிலர் அண்மையில் கொழும்பு வந்து விசாரணைக்கென இவரைக் கூட்டிச் சென்றிருப்பதாகவும் அறிய வருகிறது.

## தேவையான அளவு மா விநியோகிக்க ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

பாவனையாளர்களுக்கு தேவையான அளவு மாவை விநியோகிக்க கூடிய வகையில் செயலக புனர்வாழ்வுப் பகுதியினர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு மாவை விநியோகிக்க உள்ளார்கள்;

மா தேவைப்படும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் தமக்கு தேவையான அளவு மாவினை செயலக புனர்வாழ்வுப் பகுதியில் பெற்று விநியோகிக்குமாறு செயலக புனர்வாழ்வு திட்டப் பணிப்பாளர் கேட்டுள்ளார்;

## மாவீரர் வாரத்தை அனுஷ்டிக்க "மாவீரர் நிதியம்" ஆரம்பம்

தமிழீழ மாவீரர் வாரத்தை ஆன்மீகத் தன்மையுடையதாகவும், அர்த்தமுடையதாகவும் எழுச்சியாகவும் கொண்டாடுவதற்காக ''மாவீரர் நிதியம்'' ஒன்று எதிர்வரும் 26-ம் திகதி தமிழீழ வைப்பகத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளது. இந்நிதியத்தினை தமிழீழ நிர்வாக சேவை செயற்படுத்தவுள்ளது

இது குறித்து தமிழீழ நிர்வாக சேவையினர் விடுத்த செய்திக் குறிப்பில்;

வருடாவருடம் நவம்பர் 21 ஆம் நாள் தொடக்கம் 27-ம் நாள் வரை தமிழீழத்தில் மாவீரர் வாரம் மிகவும் உணர்வுபூர்வமாக தமிழீழ மக்களினால் அனுஷ்டிக்கப்பட்டு வருவதினை யாவரும் அறிவீர்கள். இந்த வரலாறு நாயகர்களின் நினைவு வாரத்தை ஆன்மீகத்தன்மையுடையதாகவும், அர்த்தமுடையதாகவும், எழுச்சியாகவும் கொண்டாடுவதற்கு இம் மண்ணில் வாழ்கின்ற அனைத்து மக்களும் பங்கேற்பு செய்வது இன்றியமையாததாகின்றது. இப் பங்கேற்பானது பலவேறு வழிகளிலும் மக்கள் தங்களை ஈடுபடுத்திக்கொள்ளலாம் அவ்வாறான செயற்திட்டங்களில் ஒன்றுதான் ''மாவீரர் நிதிய'' ஏற்பாடாகும். இந்நிதியத்திற்கு தமிழீழத்திலுள்ள அரச, தனி (6ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் என நினைத்து சகாமீது துப்பாக்கிச்சூடு

### ஊர்காவற்றுறையில் சிப்பாய் பலி

ஊர்காவற்துறைப் பகுதியில இராணுவத்தினர் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில இராணுவத்தினரில் ஒருவர் கொலைப்பட்டுள்ளார் காவல் கடமையில் ஈடுபட்டிருந்த சிப்பாய் ஒருவர் விடுதலைப் புலிகள் ஊடுருவி வருவதாக சந்தேகித்து துப்பாக்கி பிரயோகம் செய்ததாகவும், அதனால் மற்றவர் கொலலப்பட்டதாகவும் கொழும்பு வட்டாரங்கள் கூறியுள்ளன;

## வரி விளம்பரம்

**விசேட கழிவு**

இலகு தோசைமா, இட்டலிமா, அப்பம் மா ஆகிய வற்றை எம்மிடம் மொத்தமாகக் கொள்வனவு செய்ய விரும்புபவர்கள் முன் கூட்டியே ஒழுங்கு செய்து விசேட கழிவைப் பெற்றுக் கொள்ளுங்கள் தொடர்பு: சகல அண்ணா தொழிலகங்களிலும் (சி-10676)

**ஆண்டு4 வினாத்தாள்**

ஆண்டு 4ற்கு மாதந்தோறும் வெளியிடப்படும் மாதிரி வினாத்தாள்கள் 26-11-94 சனி வெளிவிடப்படும்: தேவையானோர் தொடர்பு கொள்ளவும். மாதிரிநாளாந்த வாராந்த (Weekend Classes) வகுப்புக்களும் மற்றும் வகுப்புக்களும் நடைபெறுகின்றன புதிய கல்வி நிலையம் 219, நாவலர் வீதி யாழ்ப்பாணம். 10189

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

**1994. 11. 24 வியாழன் இரவு**

08.01 - மாவீரர் வாரத்தையொட்டி சிறப்பு நிகழ்ச்சி-ந. கிருஷ்ணா எழுதிய "செஞ்சுடர் ஏற்றிச்சென்ற மாவீரர்"
08.20 - உழைப்போம் உயர்வோம் - நிகழ்ச்சியில் "தண்ணீர் பிரச்சினை தீரப்போகிறது" குறுநாடகம்
08.30 - செய்திகள்
08.40 - சிறப்பு நிகழ்ச்சி- வேலணையூர் சுரேஸ் எழுதிய "சண்டைக்கு புலிகள் சளைத்தவரல்ல அன்றைக்கே உரைத்தது தொண்டமானாறு"
09.00 - மணிக்கு இரவு நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்.

**1994. 11. 25 வெள்ளி காலை**

07.02 - மாவீரவணக்கம்
07.15 - மணியாரம்
07 30 - செய்திகள்
07 35 - பத்திரிகைச்செய்கள்
07.40 - மாவீரர் வாரத்தையொட்டி சிறப்பு நிகழ்ச்சி - ந. கிருஸ்ணா எழுதிய "மாவீரர் புகழ்பாடுவோம்"
08.00 - மணிக்கு காலை நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்.

## தற்கொலை படையாளி 'பாசமலர்' என்பவராம்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் பாலத்துறை பிரசாரக்கூட்டத்தில் நடைபெற்ற குண்டு வெடிப்பில் ஈடுபட்ட தற்கொலைப் படையாளி யாழ்ப்பாணத்தைச்சேர்ந்த பாசமலர் என சிறிலங்கா குற்ற புலன் விசாரணை பிரிவினர் கண்டுபிடித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இவர் யாழ்ப்பாணத்தில் இருந்து வந்து நீண்டகாலமாக கொழும்பில் தங்கியிருந்தார் எனவும் பல இடங்களில் இவர் கொழும்பில் தங்கியிருந்துள்ளதாகவும் இவர் தொடர்பான பல புகைப்படங்கள் தற்போது விசேட பொலிஸ் பிரிவுக்கு கிடைத்திருப்பதாகவும் கூறப்படுகிறது. இவர் தொடர்பாக மேலதிக தகவல்கள் பெற்றுக்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## ராணுவ சீருடையில்கும்பல் மாத்தளையில்பணம்பறிப்பு

(கொழும்பு)

வடக்கில் உள்ள இராணுவத்தினரின் பேரில் பணமோசடி செய்யும் கும்பல் ஒன்று மாத்தளையில் நடமாடி வருகிறது வடக்கு-கிழக்கில் படையினருக்கு சுகவீனம் எனவும் அவர்கள் போரில் காயமடைந்துள்ளனர் என்றும் கூறி அவர்களது உறவினர்கள் வீடுகளுக்கு சென்று பணம் வாங்குவதாக தெரிவிக்கப்படுகிறது.

இப்பணமோசடிக்காக செல்லும் ஏமாற்றுப்பேர்வழிகள் கும்பல் இராணுவ சீருடையிலேயே செல்கின்றதாம்.

### குடும்பநல பயிற்சி பரீட்சை

(யாழ்ப்பாணம்)

மாணவ குடும்பநல சேவையாளர் பயிற்சிப் பரீட்சை சுகாதாரத்துறை என். ஐ. எச். எஸ். ஸ்தாபனத்தில் வரும் 27-ம் தேதி நடைபெறவுள்ளது.

மேற்படி பயிற்சிப் பரீட்சைக்குத் தோற்றுவோர் வரும் 26-ம் தேதி தமது அடையாள அட்டையுடன் அங்கு சமூகமளிக்கும்படி கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். (சி)

### கொலை

மாத்தளையில் வைத்து கடத்தப்பட்ட இரு ஐக்கிய தேசியக்கட்சி ஆதரவாளர்களும் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

தம்புள்ளைப் பகுதியில் இவர்களது சடலங்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

---

பண்டத்தரிப்புப் பரிஷ் நோ.கூ, சங்க பொதுச்சபை

## உறுப்பினர்கட்கு ஓர் அறிவித்தல்

### மாவீரர் நினைவு நாள் பொதுக்கூட்டம் 26 - 11 . 1994

மேற்படி மாவீரர் நினைவு நாள் பொதுக் கூட்டம் சங்க தலைமை அலுவலக முன்றலில் 26-11-94 சனிக்கிழமை பிற்பகல் 4 00 மணிக்கு தலைவர் திரு. மா. புலேந்திரன் அவர்கள் தலைமையில் நடைபெறும். தயவு செய்து சகல பொதுச்சபை உறுப்பினர்களையும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளுகின்றோம்.

பொது முகாமையாளர்
பண்டத்தரிப்புப் பரிஷ் ப. நோ. கூ. சங்கம்
(சி-10764)

---

## தேவை

யாழ்ப்பாணத்தில் புதிதாக ஆரம்பிக்கப் படவுள்ள மனையியல் பயிற்சிக் கல்லூரி ஒன்றில் ஆசிரியைகளாக பணியாற்ற கீழ்க்காணும் தகுதியுடையோர் தேவைப்படுகிறார்கள்; க. பொ. த (உ/த) மனையியலில் திறமைச் சித்தியுள்ளவர்களும், "மனைப்பொருளியலும் கைத்திறனும்" பயிற்சியில் டிப்ளோமா சான்றிதழ் உள்ளவர்களும் கீழ்க்காணும் முகவரிக்கு 30-11-94க்கு முன்னர் விண்ணப்பங்களை அனுப்பவும்.

விள இல.360,
மே/பா ஈழநாதம்.
31, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம். (சி/10765)

---

## நினைவழியா நினைவு நாள்



தோற்றம்: 1932 - 01 - 23
மறைவு: 1994 - 09 - 15



மண்ணில் முத்தாக: 1970 - 11 - 02
மண்ணில் வித்தாக: 1992 - 11 - 24

**சுப்பிரமணியம் குமாரவேலு**
(அதிபர்
சைவப்பிரகாசவித்தியாசாலை
நெடுந்தீவு)

**கப்டன் மதன் (ஜிம்)**
குமாரவேலு வினோத்குமார்
நெடுந்தீவு

பலாலி இராணுவ முகாம் காவலரண் தகர்ப்பில் வீரச்சாவு எய்திய வீரன் மதனே, உன் நினைவு என்றும் எம் நினைவை விட்டகலாது;

மேற்படி கப்டன் மதனின் தந்தையாரது அந்தியேட்டிக் கிரியைகள் 12-12-1994 அன்று அன்னாரது மகளின் மல்லாவி இல்லத்தில் நடைபெறவுள்ளது: உறவினர், நண்பர்கள் அனைவரும் அதில் கலந்து கொள்வதுடன் அன்றையதினம் மதியபோசன உபசாரத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டிக் கொள்கின்றோம்;

கு. உதயகுமார்
மே/பா. சோ. தேவதாசன்
கிராமசேவையாளர்,
மல்லாவி.

(10182)

இங்ஙனம்
குடும்பத்தினர்

---

## நினைவு கூருகின்றோம்...

### 24. 11. 1994

1986-ம் ஆண்டு இதேதினத்தில் வீரச்சாவெய்திய,

★ **முத்துப்பண்டா -செல்வம்** (முறக்கொட்டாஞ்சேனை - மட்டு)

1989 -ம் ஆண்டு கரணவாய்- மண்டான் பகுதியில் இந்தியப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**அலிஸ்** (சந்திரன் திருச்செல்வம் - மண்டான், கரணவாய் மேற்கு - கரவெட்டி - யாழ்]

1990 -ம் ஆண்டு வவுனியா - மதவாச்சி, கோமரசன் கடவையில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**கப்டன் நோயல்** (சண்முகராசா விக்கினேஸ்வரன் -திரியாய் - திருமலை]

**2-ம் லெப். அர்த்தார்** (இராசையா நவரட்ணம் - திரியாய் - திருமலை]

**அலெக்ஸ்** [வெநாயகம் ரஜனிகாந் - கந்தசாமி கோவிலடி, உவர்மலை - திருமலை)

**நிமால்** (முருகையா காந்தருபன் - திருமலை)

**றிச்சாட்** (பேரின்பராசா விஜயராசா - 2-ம் கட்டை, நிலாவெளி - திருமலை)

**பீலிக்ஸ்- பீரிஸ்** ( - - கும்புறுப்பிட்டி - திருமலை]

தந்திரிமலைப் பகுதியில் சிறிலங்காப்படையினர் மீதான தாக்குதலின் போது வீரச்சாவெய்திய,

**மேஜர் பிறின்ஸ்** (பெனடிக்ற் அருள்ராஜன் - 5-ம் வட்டாரம், விடத்தல்தீவு - மன்னார்)

1992 -ம் ஆண்டு யாழ் - பலாலி கிழக்குப் பகுதி தொண்டமானாறு. இடைக்காடு பகுதியில் அமைக்கப்பட்டிருந்த சிறிலங்கா இராணுவக் காவலரண்கள் தகர்ப்பின் போது வீரச்சாவெய்திய,

**லெப். ஜெயசுபா** (தேவநாயகம் ஜெயசீலன் - மஞ்சந்தொடுவாய், கொலனி - மட்டு]

**லெப். அருந்ததி** [சாந்தகி சிவப்பிரகாசம் - பன்குடாவெளி, செங்கலடி - மட்டு)

**லெப். கௌசி** (பவானி கணபதிப்பிள்ளை -கும்புறுமூலை - மட்டு)

**பத்மா** (வசந்தி விநாயகம் - கிரான் - மட்டு)

**லெப். நாவேந்தன் - டேவிட்** (ஞானப்பிரகாசம் ஜெயபாலன் - பாலையூற்று - திருமலை)

**மாயவன்** (தர்மலிங்கம் சிறிதரன் 5ம் வட்டாரம், திரியாய் - திருமலை)

**லெப். இளநிலா - பாத்திமா** (சிவா நடராசா- தண்ணீரூற்று - முள்ளியவளை - மணலாறு)

**லெப். இசையமுதன் - சிந்து** [சபாரத்தினம் விஜயகுமார் -புதுக்குடியிருப்பு - முல்லைத்தீவு]

**2 ம் லெப். வேனி** (கௌரியம்மா விவேகானந்தம் -ஒட்டிசுட்டான் - முல்லைத்தீவு)

**கவியரசி - வனிதா** (கமலசுலோசினி பாலகிருஷ்ணன் -விசுவமடு திருமலை)

**லெப். லீலா** (கலாஜினி கந்தையா -தம்பிராய், பூநகரி - மன்னார்)

**லெப். அழகையா - கெனடி** (தேவராஜ் ஜோன்சன்- ஆட்காட்டிவெளி, அடம்பன் - மன்னார்]

**லெப். கனகேஸ்** (இரத்தினம் விஸ்வகுமார் - சிவபுரம், கிரான்சி - மன்னார்)

**பட்டு** (சந்திரமதி குமாரசாமி - வேராவில், பூநகரி - மன்னார்)

**யேனன்** (நவரட்ணம் இம்மானுவேல் -சிலாவத்துறை - மன்னார்)

**கீர்த்தி** (மேரிதிரேசா சந்தான் - சிறுகண்டல், முருங்கன் - மன்னார்)

**2-ம் லெப். அரசன் - ராஜ்** (முத்து ஜீவச்சந்திரன் - பூவரசங்குளம் - வவுனியா)

**லெப். செல்வி -டில்லி** (விக்னேஸ்வரி மாரிமுத்து- விநாயகபுரம், தணுக்காய் - நெடுந்தீவு)

**அரவிந்தா - கௌசலா** (சுகந்தி அழகுதுரை - பாண்டியன்குளம் - வவுனியா)

**தில்லைச்செல்வன் - ரகுபதி** (சின்னப்பொடி கவிரஞ்சன் - இராமநாதபுரம் - கிளிநொச்சி)

**கௌதமி** (சஜிக்கா அம்பலம் - கரடிப்போக்கு -கிளிநொச்சி)

**மேஜர் டொச்சன் - தமிழரசன்** (கந்தசாமி ஜெயக்குமார் - புன்னாலைக்கட்டுவன் - யாழ்)

**கப்டன் வீமன்** (நாகையா சுப்பிரமணியம்-சாவகச்சேரி வடக்கு-யாழ்)

**கப்டன் மதன்-ஜிம்** (குமாரவேல் வினோத்குமார் -நெடுந்தீவு மேற்கு - யாழ்)

**கப்டன் முத்துச்செல்வன்/நேரு** (ஜெயரட்ணம் பாலச்சந்திரன்-நவக்கிரி, புத்தூர்-யாழ்)

**கப்டன் மலரவன்/லியோ** (காசிலிங்கம் விஜிந்தன்-இராமலிங்கம் வீதி, திருநெல்வேலி-யாழ்)

**கப்டன் பாசமலர்** (புஸ்பலதா கணபதிப்பிள்ளை- சிறிமுருகன் குடியேற்றத்திட்டம் -திருவில் வல்வெட்டித்துறை

**கப்டன் செல்வி/தனா** (மேரிஜசிந்தா செபஸ்தியாம்பிள்ளை - புலோப்பளை-பளை)

**லெப்.முக்கண்ணன்/உமா** (வெள்ளையா சிறிகருணன் - சிறுப்பிட்டி தெற்கு, நீர்வேலி-யாழ்)

**லெப் மலரவன் மன்சூர்** (நல்லதம்பி ஞானசேகர் -தோப்பு, அச்சுவேலி-யாழ்)

**லெப். லிங்கம்-ரமணலிங்கம்** (இராஜேந்திரம் பாஸ்கரன் - கம்பர்மலை-வல்வெட்டித்துறை)

**லெப்.திருவருள்-ஜோசப்** (சின்னத்துரை கிருஷ்ணானந்தன், வரணி, கொடிகாமம்-யாழ்)

**லெப். அமுதா-நிரோசா** (கெலன் மருசலின்- புலோப்பளை-பளை)

**லெப்.தேனருவி-ரஜீந்தா** (மீரா இராமச்சந்திரன்- நுணாவில், சாவகச்சேரி-யாழ்)

**லெப்.விஜித்தா** (மேரிஎமல்டா அந்தோனிப்பிள்ளை- செம்பியன்பற்று-வடக்கு -வடமராட்சி)

**2-ம் லெப்.விக்கினேஸ்வரன்-விக்கி** (வைரமுத்து சிவராசா-தெல்லிப்பழைகிழக்கு-யாழ்)

**2ம் லெப். துரியோதனன் -யசி** (மகாலிங்கம் ரஜீஸ்வரன்-கோப்பாய் வடக்கு-யாழ்)

**2 ம் லெப் வல்லத்தரசு-மொறிஸ்** (சோமசுந்தரம் நல்லச்சந்திரன்-பருத்தித்துறை)

**2-ம் லெப்.நல்லதம்பி-பகீர்** (அரியகுட்டி தேவதாசன்-புன்னாலைக்கட்டுவன்-வடக்கு-யாழ்)

**நாகையன்-அன்று** (தேவராஜா ஜேசுநேசன்- பிறவுஸ் றோட், சுண்டுக்குழி-யாழ்)

**இசைக்கோன்** (சிவசாமி கண்ணன் - அல்வாய் மேற்கு-பருத்தித்துறை)

**கதிரவன்** (கற்கண்டு விஜயலக்சுமணம் விழிசுட்டி, சங்கானை-யாழ்)

**2.ம் லெப் கௌரி** (அமுதினி வீரசக்தி-சரிவோதய வீதி புத்தூர் யாழ்)

**2-ம் லெப் . ஜீவராணி** நந்தினி பத்மநாதன் - மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி - யாழ்)

**2-ம லெப் . காயத்திரி** (தவச்செல்வி கோவிந்தன் - தொண்டமானாறு - யாழ்)

**2-ம் லெப் . சிவம் - சிவனேஸ்** (புஸ்பமலர் யாக்கப்பு அல்வாய் மேற்கு - பருத்தித்துறை)

**வீரமணி** (மகாலிங்கம் சுதர்சன் - மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி - யாழ்)

**பாக்கியம்** (வனசா அரசரத்தினம்-வேலணை கிழக்கு)

**சந்திரா** (கவிதா குணரத்தினசிங்கம் அம்பன், குடத்தனை - வடமராட்சி கிழக்கு)

**கனிஸ்ரா** (குணசுந்தரி குணரத்தினம்' பண்டிதர் குடியிருப்பு, செற்பலி, மிருசுவில் - யாழ்)

**சக்தி** (சுதர்சினி சுந்தரலிங்கம் - கரணவாய் மேற்கு, கரவெட்டி - யாழ்)

**குலேந்தினி** (சரோசினி முத்துராசா - புத்தூர் கிழக்கு - யாழ்)

**நர்மதா நெல்சா** (பராசக்தி செல்லத்துரை - ஏழாலை மத்தி - யாழ்)

**நிதி** (உதயராணி தர்மலிங்கம் - உரும்பராய் தெற்கு யாழ்)

**ஆவர்த்தனா** ,ஜெனிற்றா ஜேசுதாசன் - பங்சால் வீதி - யாழ்ப்பாணம்)

**குறமகள்** (இந்தமதி முத்துக்குமார் - மறவன்புலோ, கிழக்கு சாவகச்சேரி

**அருமைநாயகி** (ஜெயா அஞ்சலின் ஜேசுதாசன் - பீச்றோட், குருநகர் - யாழ்)

மட்டு மாவட்டத்தில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட வெடிவிபத்தில் எமைப் பிரிந்த,

**தனபாலசிங்கம்** (சோமசுந்தரம் சிவராசா - கரவெட்டி -மட்டு)

இதேதினம் தமிழீழ எல்லைக்குட்பட்ட பிரதேசத்திலும் கடற்பரப்பிலும் சிறிலங்காப் படையினரால் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமக்கள்

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

★ குறியிடப்பட்ட மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவார்

**தமிழீழ விடுதலைப்புலிகள்**

(சி-10761)

---

## 2-ம் ஆண்டு நினைவலைகள்



**வீரவேங்கை வீரமணி**
(மகாலிங்கம் சுதர்சன்)

தலைவனின் வழிதனில் தாவிய இளம் புலி
சுதர்சன் என்ற நாமம் கொண்ட சிறு புலி
வீரமணியிவன்
உடலால் வயதால் சிறுவன் என்றாலும்
உணர்வால் இவன் பெரும் நெருப்பிவன்
எம்மினம் அடிமையாவது கண்டு
எழுந்த வீரன் இவன்
தன்மான உணர்வுடன் வாழ்வோம் என்று
தாவியே பாய்ந்தான் பலாலி களத்தினில்
தன்னுயிரை ஈந்தான் தன் சொந்த மண் தன்னில்
செங்குருதி சிந்திவிட்ட எம்மண்ணில்
செந்தமிழர் மண்ணதில் செங்களம் ஆடிய சிறும் புலியிவன்
எதிரியை வீழ்த்தி எரித்தானே
பெரும் நெருப்பாய் அன்று.

இவருடன் 24.11.92 ல் பலாலி இராணுவ தளத்தில் வீரகாவியம் படைத்து வீரச்சாவைத் தழுவிய அனைத்து போராளிகளின் நினைவுகள் ஈடேற என்றும் அவர்கள் பாதம் தொடரும்,

அனிபா வீதி
மட்டுவில் வடக்கு,
சாவகச்சேரி.

வீரமணி குடும்பத்தினர்
[10166]

## தேசிய சுபிட்ச இயக்கம் சுதந்திரகட்சியின் சொத்தா?

### பொதுஜன ஐக்கிய முன்னணிக்குள் இழுபறி

(கொழும்பு)

புதிய அரசாங்கம் அமைத்துள்ள தேசிய சுபிட்ச இயக்கத்தின் கமைப்பாளர் தெரிவில் பொதுஜன ஐக்கிய முன்னணியில் அங்கம் வகிக்கும் கட்சிகள் மத்தியில் இழுபறி நிலை ஏற்பட்டுள்ளது.

இவ் இயக்கத்தின் விசேட கூட்டம் கண்மையில் சுதந்திரக்கட்சி தலைமையகத்தில் நடைபெற்றது. இக் கூட்டத்துக்கான அழைப்பும், சுதந்திரக் கட்சியின் கடித தலைப்பிலேயே அனுப்பப்பட்டது.

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் அமைத்துள்ள இவ் இயக்கம் சுதந்திரக்கட்சியின் ஏகபோக உரிமையாக்கப் பட்டுள்ளதா என்ற கேள்வியும் எழுப்பப் பட்டுள்ளது.

## தீயில் எரிந்த கப்பல் கொழும்பு வந்தது

(கொழும்பு)

காலி துறைமுகத்தில் இருந்து 15 மைல் தூரத்தில் சர்வதேச கடற்பாதையில் தீ பிடித்து எரிந்த 'மெகறோலியன் ஏஸ்' என்ற கொரிய கப்பல் தீ அணைக்கப்பட்டு நேற்று போது கொழும்புக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

ஜப்பானிலிருந்து 3900 ஆடம்பரக் கார்களை இக்கப்பல் ஏற்றி வந்ததும் இவை அனைத்துமே தீயில் எரிந்ததும் குறிப்பிடத்தக்கது.

## ஏல விற்பனை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கீழ் வரும் பொருட்கள் 1994ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 30-ம் திகதி காலை 10.30 மணியளவில் ஏலத்தில் விற்கப்படும்.

ஏலத்தில் வெற்றி பெறுவோர் பொருட்களுக்கான முழுப் பணத்தையும் பல்கலைக்கழக காசாளரிடம் முழுமையாகச் செலுத்தி பொருட்கள் அனைத்தையும் அன்று மாலை 4.00 மணிக்கு முன்னதாக அப்புறப் படுத்த வேண்டும்.

1. பழைய புதினப் பத்திரிகை
2. றீப்பைகளினாலான மரப்பெட்டிகள்
3. முறிந்த மரக்கொப்புகள் - ஒரு தொகுதி
4. உடைந்த கண்ணாடித் துண்டுகள்
5. வெற்று உரப்பைகள், சாக்குகள், எண்ணெய் பரல்கள்
6. அலுவலகர் பாவிக்கும் லெதர்களிலான பைகள்

மேற்படி பொருட்களை 1994 கார்த்திகை மாதம் 28-ம் திகதி காலை 9.30 மணி தொடக்கம் 10.30 மணிவரை யாழ் பல்கலைக்கழக நவீனசந்தை மக்கள் வங்கிக் கட்டிடத்துக்கு அருகாமையில் உள்ள திறந்த வெளியில் பார்வையிடலாம்.

மேலதிக விபரங்களுக்கு உதவி நிதியாளர் (வழங்கலுடன்) தொடர்பு கொள்ளவும்.

**பதிவாளர்**

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**

(சி-10734)

## தற்சார்பு பொருண்மியத்திற்கு வதிவிட வேளாண்மை தேவை

பொருண்மிய மேம்பாட்டிற்கு விவசாயம், விலங்கு வேளாண்மை என்ற இரு துறைகளையும் பல்வேறு வழிகளில் முன்னெடுக்கப்பட வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. இவ்விரு துறைகளையும் மேம்படுத்த விவசாயம் விலங்கு வேளாண்மை சார் பயிற்சிகளை அளித்தல், கருத்தரங்குகளை நிகழ்த்தல், உள்ளீடுகளை விநியோகம், சமூக மேம்பாட்டுத் திட்டங்கள் கடன் வழங்கல், கால்நடைத் தீவன உற்பத்தி விற்பனை போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இவையனைத்தையும் ஒருங்கிணைத்தாக தற்சார்பு பொருண்மியத்திற்கு அத்திவாரக் கல்லாக வதிவிட வேளாண்மைப் போட்டி மிளிர்கிறது.

வதிவிட வேளாண்மையின் கூடுதலான அளவில் மரக்கறி உற்பத்திகள் மேற்கொள்ளப்படுவதால் இம்மரக்கறிகளை தோட்டக்காணிகளில் உற்பத்தி செய்ய பயன்படுத்தப்படும் நிலப்பரப்பு மீதப்படுத்தப்பட்டு எமக்கு அத்தியாவசியமாக உள்ள சிறுதானியச்செய்கையில் ஒரு தன்னிறைவை நோக்கிச் செல்ல ஏதுவாகின்றது. இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் இருக்கும் பிரதேசங்களின் உற்பத்தி ஆன்மையாயினும் அதற்கீடாக இவ்வதிவிட வேளாண்மையின் மூலம் மரக்கறிப்பயிர் உற்பத்திகளை இலங்களில் மேற்கொண்டு மரக்கறிகளை தோட்ட வயல் நிலங்களில் உற்பத்தி செய்யும் நிலப்பரப்பை மீதப்படுத்தி சிறுதானியங்களான குரக்கன் சாமை தினை, வரகு, கம்பு, போன்ற தானிய உற்பத்திகளை மேற்கொள்வதன் மூலம் இரு இலக்குகளையும் நிறைவேற்றக்கூடிய சாத்தியக்கூறு நிலவுகிறது.

இவ்வாறான விவசாய ரீதியான உற்பத்திகளும், விலங்கு வேளாண்மை உற்பத்திகளும் வதிவிட வேளாண்மையின் மூலம் முன்னேக்கி நகர்வதால் பொருளாதாரத்தின் ஒரு பக்க தேவையை பூர்த்தி செய்யும் நிறைவை பெற முடிகின்றது.

### வதிவிட வேளாண்மையின் நோக்கம்

நாட்டின் இன்றைய சூழ்நிலையில் அதிகரித்து வரும் வாழ்க்கைச் செலவைக் குறைப்பதற்கு ஒவ்வொரு குடும்பதினருக்கும் ஒரு வீட்டுத் தோட்டம் அத்தியாவசியமானதாகும். கிராமப்புற வாசிகளென்றாலும் நகரப்புற வாசிகளென்றாலும் காய்கறி. இலைக்கறி பழவகைகள் முதலியவற்றில் அன்றாட வீட்டுத்தேவையை பூர்த்தி செய்ய நல்லதொரு வீட்டுத்தோட்டம் வழிவகுக்கும் வீட்டுத்தோட்டம் செய்கையை மேற்கொள்ளும் போது குடும்பத்தை நடாத்தும் நாளாந்தச் செலவு குறைக்கப்படுவதுடன் வருவாயும் அதிகரிக்கும். வாழ்க்கைத்தரம் உயரவும் வழியுண்டு.

விவசாயஉற்பத்தியையும் விலங்கு வேளாண்மையையும் இணைத்து வதிவிட வேளாண்மைப்போட்டி என புதிய மெருகூட்டப்பட்டு வருடந்தோறும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தால் சிறந்த முறையில் முன்னெடுக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்க ஒரு விடயமாகும்.

வதிவிட வேளாண்மைப் போட்டியின் நோக்கம் சுயசார்புப் பொருண்மியத்திற்கு அத்திவாரமிடுவதுடன் அதன் பிரதிபலிப்புக்களை எம்மக்கள் நுகர வேண்டும் என்பதுமாகும் உற்பத்திப் பெருக்கத்துடன் மக்கள் சுத்தமான போசாக்கு நிறைந்த காய்கறிகளைப் பெற்று சுகதேகிகளாக வாழ முடியும். செறிந்த கிருமி நாசினி பயன்படுத்தாத நச்சுத் தன்மையற்ற புதிய மரக்கறி வகைகளைப் பெற்று நிறையுணவை தயாரித்துக் கொள்வதன் மூலம் உடல் நலத்தைப் பேண முடியும். மரக்கறிக்காக செலவிடப்படும் பணம் மீதப்படுத்தப்படுவதுடன் சந்தைக்குச் செல்ல செலவிடப்படும் நேரமும் சேமிக்கப்பட்டு வேறு தேவைக்காக அந்நேரத்தை பயன்படுத்துவதன் மூலம் உச்ச பயன்பாட்டைப் பெறலாம். ஓய்வு நேரத்தை பயனுடையதாகவும், பெறுமதியுடையதாகவும் வதிவிட வேளாண்மை உதவுகிறது. வீட்டைச் சுற்றியுள்ள வெளியான இடங்களையும் இயற்கை வளங்களையும் சகல கழிவுப் பொருட்களையும் பிரயோசனப்படுத்த இவ் வதிவிட வேளாண்மை உதவுகிறது. புரத உணவை விலங்கு வேளாண்மை மூலம் குறைந்த செலவில் சுலபமாகப்பெற முடியும். மேலதிக மரக்கறி வகைகளை விற்பனை செய்வதன் மூலம் பணம் பெற முடிவதுடன் மரக்கறிக்கு செலவிடப்படும் பணம் மீதப்படுத்தப்பட்டு இன்னொரு தேவையைப் பூர்த்தியாக்கும் வல்லமையைப் பெறும்.

வதிவிட வேளாண்மையில் கலப்பு வீட்டுத் தோட்டத்தில் இடம்பெறும் பயிர்களில் அநேகமானவை இயற்கையாக அந்த சூழலுக்கு உகந்தவையாகவும் பாரம்பரியமாகச் செய்யப்படும் பயிர்களாகவும் அமைவது சிறப்பாக உள்ளது. இங்கு இரசாயன நாசினிகளும் வளமாக்கிகளும் தேவைப்பட மாட்டா. அல்லது தேவை குறைக்கப்படும். தோட்டங்கள் தமக்கே தமக்கு உரமிடுகின்ற சூழ்நிலை உருவாகும். இச் சூழ்நிலை தொடர்ச்சியான சேதனப்பொருட்களின் நேரடிச் சேர்க்கை அறுவடை மற்றும் பசளிடும் முயற்சிகளின் போது கழிக்கப்படும் சேதனப்பொருட்களின் சேர்க்கை, வீட்டில் வளர்க்கும் கால்நடைகளிலிருந்து பெறப்படும் கழிவுகளின் சேர்க்கை வீட்டுச் சமையலறைக்கள் பெறப்படும் கழிவுப் பொருட்களின் சேர்க்கை, என்பவற்றால் உண்டாக்கப்படும் கூட்டுப் பயிர்ச்செய்கை சில சந்தர்ப்பங்களில் பூச்சி புழுக்களை இயற்கையாகவே கட்டுப்படுத்தவும் வழிகோலும். வீட்டிலேயே கிடைக்க கூடிய பொருட்களைச் சேர்த்து கிருமிநாசினிகளை தயாரிக்கலாம்.

வீட்டுத் தோட்டத்தில் தண்ணீர்த் தொட்டி. நீர் இறைக்கும் இயந்திரம் என்பவற்றுக்கு அண்மையில் வாழை. இலைக்கறி வகைகள், நடுகை செய்யலாம் உலர்ந்த இடங்களில் பருப்பு வகை, மரவள்ளி, பலா, முந்திரிகை, கொய்யா, மா, புளி, பப்பாசி என்பனவும், பந்தலில் படரும் வகைகள், படரும் பழமரக்கறி வகைகளும் நடுகை செய்தல் பொருத்தமாக அமையும். பந்தலின் கீழ் வளரக்கூடியவையான வற்றாளை, மற்றும் கிழங்குகள், கீரை கடுகு, கங்குள் என்பவற்றைப் பயிரிடலாம். வேலியுடன் இணைந்த வகையில் முருங்கை, மரவள்ளி, அகத்தி, அன்னசி என்பனவும் களை வளர்ச்சியைக் கட்டுப்படுத்த உதவும் பயிர்களாக வற்றாளை, மரவள்ளி என்பனவும் பயிரிட உகந்தவை.

இத்தகைய அளப்பரிய நன்மைகளுடன் தேனி வளர்ப்பு, தாரா வளர்ப்பு, முயல் வளர்ப்பு, ஆடு, மாடு, கோழி,வளர்ப்பு என்பவற்றையும் அதனால் விளையும் நன்மைகளையும் கருத்திற்கொண்டே தமிழீழ விடுதலைப் புலிகளின் ஓர் அமைப்பான தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் இவ் வதிவிட வேளாண்மையை ஊக்குவித்து வருகிறது. இதன் பிரதிபலன்களை தமிழீழ மக்கள் நுகர வேண்டும் என்ற ஆர்வத்துடன் போட்டியாக இதனை நடாத்தி பெறுமதி மிக்க பரிசில்களையும் வழங்கி வருகிறது.

- தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்

## 2ம் ஆண்டு நினைவஞ்சலி



**லெப்டினன்ட் அமுதா நிரோஜா**

(மருசலீன் கெலன்)

புலோப்பளை, பளை

மலர்வு: 25-09-1973

வீரச்சாவு: 24-11-1992


தமிழுக்கு அமுதென்று பெயர் - தலைவன்
தந்த பெயர் உனக்கு அமுதா
விழலுக்கு இறைத்த நீரல்ல உன் சாவு
வீரத்தை போற்றுகிறோம் விண்ணளவு

அம்மா, அண்ணா
உற்றார்,உறவினர்கள்

(10186)

## 2.ம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 17.11.1971



வீரச்சாவு 24.11.1992

**லெப். மலரவன் / மன்சூர்**

(நல்லதம்பி ஞானசேகர்)


தோப்பு அச்சுவேலி

தாய்மை பொங்கிப் பூரிக்குநடா
சேயின் செங்குருதி தமிழ் மண்ணில் கண்டு சிங்களப்
படையைச் சுட்டெரித்த வீரனே
ஈகச்சுடரேற்றி வாழ்த்துகிறோம்.

புத்தூர் கிழக்கு - குடும்பத்தினர்

(10183)

## இரண்டாம ஆண்டு நினைவலைகள்



**மேஜர் தமிழரசன**

(டொச்சன்)

கந்தசாமி ஜெயக்குமார்

[புன்னாலைக்கட்டுவன் வடக்கு]

தாயின் மடியில் 21.02.1966

தமிழவர் மனங்களில் 24.11.1992


உன்னை நாம் இழந்து
இரண்டு ஆண்டுகள் ஆகியும்
எம் இதயங்களில்
அழியாத ஓவியமாய்
என்றும் இருக்கின்றாய்
உன் ஆத்மசாந்தி
வேண்டி நிற்கும்

மித்திரை,
குப்பிளான்,
ஏழாலை.

பொ. இராசையா
குடும்பத்தினர்

(10188)

## 31-ம் நாள் 90-ம் நாள் நினைவலைகள்



**செல்வவிநாயகம் நவரெட்ணம்**

(சுருட்டு வியாபாரி)

**நவரெட்ணம் அவையாம்பிகை**

(அம்மன்)

(வல்வெட்டித்துறை)

ஆசையோடும் பாசத்தோடும் மேன்மையுற எம்மை வளர்த்தீர்கள். இன்று அம்மா நீங்கள் போய் 60-ம் நாள் நிறையும் போது எம் தந்தையையும் உங்களுடன் கூட்டிப் போனீர்களே. உங்கள் இருவரின் பிரிவும் ஆறாத்துயராய் எம்மைத் தளர வைத்து விட்டவே. எங்கள் தெய்வங்களே உங்கள் சாந்தியே நாம் வேண்டுவது.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

N. குமரேசன்
131, அரசடி வீதி,
கந்தர்மடம்.

(10184)

## 2ம் ஆண்டுநினைவலைகள்

தாயின்மடியில் 12.11.1972

தாயகமண்ணில் 24.11.1992



**லெப்டினன்ட் கௌரி**

(கணபதிப்பிள்ளை பவானி)

குப்புறுமூலை, இராலி
மட்டக்களப்பு

தமிழீழத்தாய் பெற்றெடுத்த செல்வியே, அரக்கன் உன்னை எம்மிடம் இருந்து பிரிக்க வஞ்சனை செய்தனையோ பிரிந்திட்டாய் எம்மை விட்டு. உன் லட்சியப்பாதையில் நாம் செல்கையில் எத்தடை வரினும் அஞ்சிடோம்.

- குடும்பத்தினர்

(10178)

## நினைவலைகள்

1-ம் ஆண்டு 2-ம் ஆண்டு





லெப்.பாவாணன் (கவி)
(வேலு சங்கர்)

2-ம் லெப் காயத்திரி
(கோவிந்தன்
தவச்செல்வி)

30-7-75 <— தாயின்மடியில் —> 29-12-75
11-1-1993 <— தாயகமண்ணில் > 24-11 92

அடிமை விலங்கை உடைத்திட வேண்டும்
அன்னியர் படைதனை அழித்திட வேண்டுமென்று
அண்ணன் பாதையில் காலடிபதித்த வீர வித்துக்களே
உங்கள் கனவு நனவாக வெகு தூரமில்லை.

- குடும்பத்தினர்

உறணிபுதுக்குடியேற்றம்,
வல்வெட்டித்துறை. (10159)

## சீனாவிலிருந்து சிமெந்து

(கொழும்பு)

கொழும்பில் ஏற்பட்டுள்ள சிமெந்து தட்டுப்பாட்டை நீக்கு முகமாக இரண்டு லட்சம் பொதி சிமெந்துகளுடன் சீனாவிலிருந்து கப்பல் ஒன்று கொழும்பு துறைமுகம் வந்து சேர்ந்துள்ளது

காங்கேசன் சிமெந்து ஆலை இயங்காதிருப்பதனால் சிமெந்திற்கு அங்கு பெரும் தட்டுப்பாடு நிலவுவதாகவும் காலியிலும், புத்தளத்திலும் உள்ள சிமெந்து ஆலைகளால் நாட்டின் தேவையை பூர்த்தி செய்ய முடியவில்லை என்றும் ஆலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன

## 2-ம் ஆண்டு நினைவாக



பலர்வு
08 01 1973

வீரச்சாவு
24.11.1992

வீரவேங்கை ஆவர்த்தனா
யேசுதாசன் ஜெனிற்றா (அஜித்தா)

இந்நாளில் பாச உள்ளங் கொண்ட
அனைவரும் அவரை
நினைவு கூருவோம்.

இவரின் பிரிவால் துயருறும்
அப்பா, அம்மா, சகோதரர்
மற்றும் உற்றார், உறவினர்,
நண்பர்கள்.

186, பாங்சால் வீதி,
யாழ்ப்பாணம்.
(10168)

## இலவச மூக்குக் கண்ணாடி

(தென்மராட்சி)

தென்மராட்சி பகுதியில் வறுமைக்கோட்டிற்கு உட்பட்டுவாழும் மக்களுக்கு சாவகச்சேரி அரிமா சழகத்தினர் இலவச மூக்குக்கண்ணாடியினை பரிசோதித்து வழங்கி வருகின்றனர்.

கடந்த 20-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை சாவகச்சேரி மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் வைத்து 30 பேருக்கு மூக்குக் கண்ணாடி சாவகச்சேரி அரிமா சழகத்தின் தலைவர் திரு. ரி நவரத்தினராசாவினால் வழங்கப்பட்டது மற்றும் கண்பரிசோதித்து கண்ணாடி வழங்க சிபார்சு செய்த ஏனையோருக்கு நவ்வாரம் சாவகச்சேரி றிபேக் கல்லூரியில் வைத்து வழங்கப்படவுள்ளதாக சாவகச்சேரி அரிமா சழகத்தின் மூக்குக் கண்ணாடி பரிசோதனைக் குழு தலைவர் எஸ் நவரத்தினம் தெரிவித்தார்

(86)

## அஸ்கிரிய பீடாதிபதி கோரிக்கை

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு பிரச்சினைக்குத் தீர்வு காணும் முகமாக சிறுபான்மை மக்களின் நலன் பேணப்படும் வேளை, பெரும்பான்மை மக்களின் உரிமை பாதுகாக்கப்பட வேண்டும் என அஸ்கிரிய பீடாதிபதி பலிப்பானந்த சந்தானந்த தேரோ ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவுக்கு தெரிவித்துள்ளார்.

கண்டி தலதா மாளிகையில் வைத்து அஸ்கிரிய பீடாதிபதியை ஜனாதிபதி சந்தித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்ததாக செய்திகள் கூறுகின்றன.


## பூநகரியில் சிரமதானம்

(கிளிநொச்சி)

மாவீரர் வாரத்தை முன்னிட்டு பூநகரி பிரதேசத்தில் பெரியளவிலான சிரமதானப் பணி ஒன்று நேற்று ஆரம்பமானது.

50 உழவு இயந்திரங்களின் துணையுடன், பூநகரி பிரதான வீதி செப்பனிடப்படவுள்ளது. இப்பணியில் பூநகரி உழவு இயந்திர உரிமையாளர் சங்கம் உட்பட பல சங்கங்கள் பங்கேற்கவுள்ளன.

## பிறந்தநாள் நினைவலைகள்



லெப். வேந்தன் / கில்மன்
வேலாயுதபிள்ளை வரதன்

| பிள்ளையாய் | வேங்கையாய் | மாவீரனாய் |
|---|---|---|
| 24-11-1970 | 29-09-1988 | 09-06-1992 |


தமிழர் தம் துயர்கண்டு புலியானாய்
தாய் மண்ணை மீட்க மாவீரனானாய்
மணமேடையில் பார்க்க எண்ணினோம்
ஆனால் இன்று!
மாவீரர் கல்லறையில பார்க்கின்றோம்.
இன்றுனக்கு பிறந்தநாள்!
புதுச்சட்டை போட்டு
வாழ்த்தினோம் அன்று.
பூமாலை போட்டு
பூஜிக்கின்றோம் இன்று.

என்றும் நீங்கா நினைவுடன்
அப்பா, அம்மா, அத்தான், அக்கா
குட்டி மருமக்கள் நர்த்தனன்,
மதிதனன்

'திருவதிகை'
அளவெட்டி. (10173)

# 2-ம் ஆண்டு நினைவஞ்சலி

"கடந்த காலத்தின் நினைவுகள் பசுமையாக இருக்கையில்
உம்மை நினைவு கூர்கின்றோம்."



## வீரவேங்கை அன்ரு - நாகையன்

தேவராசா யேசுநேசன்
(சாள்ஸ் அன்ரனி சிறப்பு படையணி)
அச்சக ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

பிறப்பு:
4 - 4 - 1976

வீரச்சாவு:
24 - 11 - 1992

றெக்ஸ் வில்சன்,
கட்டிட ஒப்பேற்றுனர், நாவாந்துறை.
(10106)

## இரண்டாம் ஆண்டு இதயக் கசிவுகள்



## கப்டன் மலரவன்

(லியோ புயற்பறவை)
காசிலிங்கம் விஜிந்தன்
(முன்னாள் யாழ். மாவட்ட மாணவர் அமைப்புப் பொறுப்பாளர்)

மலராக:- 8.4.1972
வித்தாக:- 24.11.1992

சகல கலா வல்லவனே! சரித்திரமாய் வாழ்பவனே!
இகம்போற்றும் 'போர் உலா' இலக்கிய நாயகனே!
தாயகக் கனவினைத் தன்னகத்தே சுமந்திட்ட தாரகையே!
ஓய்ந்தது உன் கரம் மட்டுமே! ஓயவில்லை நின் இலட்சியம்
பெருங் களமாடி நின்றநின் தோழன் லக்ஷ்மனும்
கரும்புலியாகிக் காவியமாய் நிலைத்திட்டான்
விடியலுக்காய் வித்தான முத்தான வேங்கைகளே!
நிலையானீர்! நீக்கமற வாழ்ந்திடுவீர் எம்மிதயங்களில்.

மண்ணுக்காய் வித்தாகி மாண்புற்ற மாவீரர்
கண்ணான செல்வங்கள் அத்தனை பேருக்கும்
காணிக்கையாய எம்மிதய அஞ்சலிகள்-

- குடும்பத்தினர்.

(10172)

### சிந்தனைக்கு

'இது சாத்தியமில்லை' என்கிறீர்களா அப்படியான ஒன்று பிரெஞ்சு மொழியில் இல்லையே.

- நெப்போலியன் போனப்பாட்.

ஈழநாதம்

61, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 24-11-1994

தொலைபேசி

ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2024

தபால் பெட்டி எண் - 05

## முன்னேற வழி

இது ஒரு 'இலத்திரனியல் யுகம்'. இதுவே இன்றைய உலகின் வளர்ச்சிக்கும், அபிவிருத்திக்கும் அடிப்படையான விஞ்ஞான, தொழில் நுட்பமாக மாறியுள்ளது. இவ் இலத்திரனியல் இருபதாம் நூற்றாண்டின் இறுதியில் உலகில் பெரும் சாதனைகளையும் மாற்றங்களையும் செய்து முடித்துவிடும் என்றே திடமாக நம்பலாம்.

இவ்வாறான இலத்திரனியல் யுகம் நோக்கி தமிழீழமும் முன்னேற வேண்டும் என்பதே தேசியத் தலைவர் பிரபாகரனின் அவாவாகும். அவர் இதனை அண்மைக் காலமாக பெரிதும் வலியுறுத்தி வருகின்றார். இறுதியாக நிதர்சனம் நிறுவனத்தினரைச் சந்தித்து உரையாடிய போதும் அவர் இதனையே வலியுறுத்தியுள்ளார். 'கட்டி எழுப்பப்படவுள்ள தமிழீழத்தின் வளர்ச்சிக்கு ஆயுதத்தை மட்டும் நம்பியிராது எல்லாத் துறைகளிலும் வளர வேண்டும் என்பதில் நாம் அக்கறையாகவுள்ளோம். இன்னும் அதில் நாம் எவ்வளவு வேகமாக வளர்கின்றோமோ, அதன் மூலமே நாம் மாற்றத்தை அடைவோம்' என அவர் தனது பேச்சின் போது குறிப்பிட்டார்.

இன்று போரினால் தமிழீழத்தின் அபிவிருத்தியானது பெரிதும் தடைப்பட்டுப் போயுள்ளது. பெருவளவில் பின்னடைவுகளையும் அது சந்தித்துள்ளது. ஆனால் சில துறைகளில் நாம் முன்னேற்றங்களையும் கண்டுள்ளோம். இவ்வளர்ச்சிக்கு நம்மிடமுள்ள குறைந்தளவு வசதிகளையும் எமது விஞ்ஞான, தொழில்நுட்ப அறிவையும் அதற்குப் பயன்படுத்தியுள்ளோம்.

ஆனால் உலகின் வளர்ச்சிக்கு எமது இச் சிறு வளர்ச்சி ஈடுகொடுக்கமாட்டாது என்பது வெளிப்படை. இந்த வகையில் போரினால் ஏற்பட்டுள்ள பின்னடைவுகள், அழிவுகள் என்பனவற்றில் இருந்து மீளவும், எதிர்காலத்தில் சுபீட்சமான வாழ்விற்கும் புதிய விஞ்ஞான, தொழில் நுட்பத்தில் நாம் அக்கறை காட்டுபவர்களாக இருக்க வேண்டும். அதுவே எதிர்காலத்தில் தமிழீழத்தின் வளர்ச்சிக்கும், மாற்றத்திற்கும் இட்டுச் செல்லக் கூடியதாகும்.

இன்று உலகின் வளர்ச்சி அடைந்த நாடுகளாக இருப்பவை யாவும் காலத்திற்குக் காலம் விஞ்ஞான தொழில் நுட்பத்தில் முதன்மை நாடுகளாகவும், கண்டுபிடிப்பாளர்களாகவும் இருந்தவர்கள் தான். இதனால் தான் இவ்வுயர் நிலையை அவற்றால் எட்ட முடிந்தது. நீராவி இயந்திரத்தைக் கண்டுபிடித்து பிரிட்டன் தன்னை உலக வல்லரசு ஆக்கியதென்றால், அணுவைப் பிளந்து அமெரிக்கா தனது வல்லாதிக்கத்தை நிலை நிறுத்தியதெனலாம். இதேபோன்று யப்பான் இன்று கணனித் துறையிலும் இலத்திரனியலிலும் சாதனை படைத்து உலகின் பொருளாதார வளத்தையே அள்ளிச் செல்கின்றதெனலாம்.

ஆனால் யுத்தத்தில் சிக்கிப் போயுள்ள தமிழீழத்தில் இது சாத்தியமாகுமா என்று சிலர் கேட்கவும் கூடும். இது வரலாறு புரியாதவர்களின் கேள்வியாகவே இருக்கும். இரண்டாம் உலக மகாயுத்தத்தில் பேரழிவைச் சந்தித்த யப்பானே இன்று உலகில் பொருளாதார வல்லரசுகளில் முதன்மையாகத் திகழ்கின்றது. அதேபோன்றே இரண்டாம் மகாயுத்தத்தால் சின்னாபின்னமாகிப்போன ஜேர்மனியே இன்று யுத்தத்தில் வென்ற பிரிட்டன், பிரான்சை விட வளர்ச்சியடைந்த பொருளாதார நெருக்கடிகளைத் தீர்த்த நாடாகவுள்ளது.

இவை யாவற்றையும் விட ஐரோப்பாவில் இருந்து விரட்டப்பட்ட யூதர்களே பாலைவனமாகப் பரந்து கிடந்த இன்றைய இஸ்ரேலை நிர்மாணித்தவர்கள்: இவர்கள் இன்று விஞ்ஞான, தொழில் நுட்பத்தில் பெயர் சொல்லக் கூடிய அளவிற்கு விரைந்து விட்டனர். அணுவை அவர்கள் வெற்றி கொள்ளவில்லையா?

இதேசமயம் தமிழ் மக்கள் மேலே குறிப்பிட்ட எந்த நாட்டு மக்களுடன் ஒப்பிட்டுப் பேசுவதில் குறைந்தவர்களும் அல்ல. அவர்களைப் போன்றே தமது மண்ணிற்காகவும், மக்களுக்காகவும் அளப்பரிய தியாகங்கள் செய்தவர்கள். ஒப்பீட்டு ரீதியில் அவற்றை விடக் கூடுதல் என்றே கூறலாம். அத்தோடு கடின உழைப்பிற்கும் புத்திக்கூர்மைக்கும் பெயர் பெற்றவர்கள். அவர்கள் நடத்தி வரும் ஆயுதப் போராட்டம் குவித்துள்ள வெற்றிகளே இதற்குச் சான்று பகரக் கூடியவை.

ஏன் சிறிலங்கா அரசாங்கம் பொருளாதாரத் தடையை விதித்த போதும் தமிழீழ மக்கள் வாழ்வுடன் போராடி வெற்றி பெறவில்லையா? அவ்வாறு இல்லாது போனால் கடந்த நான்கரையாண்டு கடும் போரிலும், பொருளாதாரத் தடையிலும் அவர்கள் அழிந்தல்லவா போயிருக்க வேண்டும். யுத்தகாலத்திற்கு ஏற்ப அவர்கள் தமது வாழ்க்கையை மாற்றி அமைத்ததில் வெற்றி பெறவில்லை என்று கூறமுடியுமா?

இந்நிலையில் நவீன தொழில்நுட்ப விஞ்ஞானம் என்பது மேற்குலகத்திற்கோ அன்றி கிழக்காசிய விறகேர மட்டும் உரியதல்ல. அது தமிழீழத்திற்கும் உரியது தான். இந்தவகையில் விஞ்ஞானமும், தொழில்நுட்பமும் வளர்த்தெடுக்கப்பட வேண்டும். இது சகல துறையிலும் விரிவாக்கம் செய்யப்படவேண்டும் அப்பொழுது தான் தமிழீழம் சிறப்புற தன்னை வெளிக்காட்டிக் கொள்ள முடியும்.

இந்நிலையை எய்துவதற்குத் தலைவர் பிரபாகரன் குறிப்பிட்டது போல சகல துறைகளிலும் தமிழ்மக்கள் வளர வேண்டும்; ஒவ்வொரு பணியிலும் ஈடுடுவோர் தாம் செய்யும் பணிகளில் திருப்தி அடையக் கூடாது. திருப்தி அடைந்த மனிதர்களாக எப்பொழுதும் முயற்சி செய்து கொண்டே இருக்க வேண்டும். அதுவே எமது வளர்ச்சிக்கு வழிவகுக்கும். அதாவது முயற்சி என்பது தளராது தொடர்ந்தால் வளர்ச்சி படிகளில் விரைவாகவே நாம் முன்னேறிச் செல்லமுடியும்.

# ஐ. தே. க. அரசின் அறிவிப்புகள் புதிய அரசுக்கே சுமையாகிறது

### இடைக்கால பட்ஜட்டை சமர்ப்பித்து பீரிஸ் உரை

(கொழும்பு)

கடந்த மே மாதம் ஐ. தே. க. அரசு அறிவித்திருந்த பொருளாதார சலுகை மற்றும் வரி குறைப்பினால் புதிய அரசு பெரும் சுமையை சுமக்க வேண்டியுள்ளதாக பிரதி நிதியமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் இடைக்கால பட்ஜட்டை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து பேசும் போது குறிப்பிட்டுள்ளார்.

இந்த ஆண்டு பட்ஜட்டில் துண்டு விழும் தொகையும் இதனால் ஏற்கனவே அறிவிக்கப்பட்ட மொத்த தேசிய வருமானத்தில் 6.8 என்ற சதவீதத்திலிருந்து 10 சதவீதமாக அதிகரித்துள்ளதாகவும் அவர் கூறினார். இதனால் பணவீக்கமும் 10 சதவீதத்திலிருந்து மேலும் அதிகரிக்கலாம் என அமைச்சர் குறிப்பிட்டார்.

துண்டு விழும் தொகை அதிகரிப்பிற்கு புதிய அரசு ஐ. தே. க. அரசை குற்றஞ்சாட்டிய போதும் புதிய அரசும் பாண் விலை குறைப்பு, உர விலை குறைப்பு மூலம் இத்தொகையை அதிகரித்துள்ளதாக சுட்டிக் காட்டப்படுகிறது. இந்த வரவு செலவுத் திட்டத்தில் 1000 கோடி ரூபா துண்டு விழும் தொகையாக உள்ளது.

# லொறிகளில் உள்ள பற்றரிகள் படையினரால் பறிப்பு

[கொழும்பு]

வடபகுதி நோக்கி கொழும்பிலிருந்து பொருள்களை ஏற்றிச் செல்லும் லொறிகளிலுள்ள பற்றரிகளை ஈரப்பெரியகுளம் வீதித் தடை முகாமில் வைத்து படையினர் பறித்து வருகின்றனர்.

இதனால் லொறிகளை இயக்க முடியாமலும், இரவுப் பயணத்திற்குத் தேவையான வெளிச்சத்தையும் பெற முடியாமல் இருப்பதாக லொறி உரிமையாளர்கள் - சாரதிகள் - கிளீனர்கள் ஜனாதிபதிக்கு மகஜர் ஒன்றையும் அனுப்பியுள்ளனர்.

இதேவேளை தாண்டிக்குளத்தில் வைத்து படையினரின் தேவைகளுக்காக எடுக்கப்படும் லொறிகளுக்கு ஊதியம் எதுவும் வழங்கப்படுவதில்லை எனவும் அவர்கள் தமது மகஜரில் குறிப்பிட்டுள்ளனர்.

இம்மகஜரின் பிரதிகள் பிரதமர், பிரதிப் பாதுகாப்பு அமைச்சர், பாதுகாப்பு நடவடிக்கை பிரிவுத் தளபதி, இராணுவத் தளபதி, வன்னி இராணுவத் தளபதி, அமைச்சர்களான அஷ்ரப், சிறிமானி, தொண்டமான் ஆகியோருக்கும் அனுப்பப்பட்டுள்ளன.

# புறப்படத் தயாரான ஒஸியை காமினியே தடுத்து நிறுத்தினார்

### மரணவிசாரணையில் மெய்க்காவலர் சாட்சியம்

(கொழும்பு)

பாலத்துறைக் கூட்டத்தில் பேசி முடித்ததும் புறப்படுவதற்குத் தயாரான ஒஸி அபயகுணசேகராவை காமினி திசாநாயக்காவே தடுத்தார். இவ்வாறு தற்போது கொழும்பு மாவட்ட நீதிமன்றில் நடைபெற்று வரும் ஒஸி அபயகுணசேகரா மரண விசாரணையில் சாட்சியமளித்த அவரது மெய்க்காப்பாளர் கீர்த்தி ரஞ்சித் கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில் நான் ஒஸி அபயகுணசேகராவின் மெய்ப்பாதுகாப்பாளராகக் கடமையாற்றி வருகின்றேன். சம்பவம் நடைபெற்ற தினம் இரவு 7 மணிக்கு நாங்கள் பாலத்துறை ஐ. தே. க. கூட்டத்திற்குச் சென்றோம். இரவு 10.10 மணிக்கு ஒஸி கூட்டத்தில் பேச ஆரம்பித்தார். அவர் பேசி முடியும் போது மணி 11.20; அவர் பேசும்போது நான் ஒலிவாங்கிக்கருகில் நின்றேன்.

அவர் கூட்டங்களில் பேசி முடிந்தால் வெந்நீர் குடிப்பது வழக்கம்; நான் அவருக்கு வெந்நீர் ஒரு கிளாசைக் கொடுத்துவிட்டு மேடையிலிருந்து கீழே இறங்கினேன். அவர் பேசி முடித்ததும் புறப்பட்டு செல்லப் போவதாக ஏற்கனவே எமக்கு அறிவித்திருந்தார்; அதனால்தான் நான் மேடையிலிருந்து கீழே இறங்கி வந்தேன்.

ஒஸி அபயகுணசேகர பேசி முடிந்து சுமார் 10 நிமிடம் வரை மேடையில் அமர்ந்திருந்தார். பின்னர் தான் புறப்பட்டுச் செல்வதற்காக காமினி திசாநாயக்காவிடம் விடைபெறுவதை நான் அவதானித்தேன். அப்போது பிரேமச்சந்திரா பேசிக் கொண்டிருந்தார்.

காமினி திசாநாயக்கா ஒஸியை போக வேண்டாம் எனத் தடுத்தார். அவரும் இருந்தார்.

அதன்பின் காமினி திசாநாயக்கா பேசினார். நான் மேடைப் படிக்கட்டில் நின்று கொண்டிருந்தேன்,

காமினி பேசி முடித்ததும் பட்டாசு வெடிகள் வெடிக்கும் ஓசை கேட்டது. பெரும் சத்தத்துடன் வெடிகள் வெடித்தன. அவற்றுள் மலர் வெடிகளும் காணப்பட்டன. அவர் பேசி முடித்ததும் மக்கள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர். மேடையில் இருந்தோரும் புறப்பட்டுச் செல்ல ஆயத்தமானார்கள்.

அப்போது பெரிய வெடிச் சத்தம் கேட்டது.

நான் உடனடியாக அபயகுணசேகராவின் காருக்கு அருகே சென்றேன். ஏனெனில் அவரின் கார்ச்சாவி என்னிடமே இருந்தது.

அப்பகுதி முழுவதும் இருட்டாகஇருந்தது சிலர் மேடையிலிருந்து கீழே விழுந்தது தெரிந்தது.

ஒஸியை வாகனமொன்றில் ஏற்றி ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்றோம். அவர் தண்ணீர் கேட்டுக் கூச்சலிட்டார் பின்னர் தாதிகள் அவரை சத்திரசிகிச்சை அறையினுள் கொண்டு சென்றனர் என அவர் தெரிவித்தார்.

அரசின் முதலாவது வரவு செலவு திட்டம்

# மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 9 சதவீதம் துண்டுவிழுகிறது

(கொழும்பு)

அரசாங்க வங்கிகளில் வழங்கிய கடன்களில் பெருந்தொகைப் பணம் மீளப்பெறப்படாதிருப்பது குறித்தும், விவசாயிகளுக்கு கணிசமானளவு கடனுதவியை வழங்குமாறு விடுக்கப்பட்டிருக்கும் அறிவுறுத்தல்கள் குறித்தும் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகள் விசனம் தெரிவித்துள்ளன;

இது தொடர்பாக ஆராய அடுத்த மாதமளவில் உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி ஆகியவற்றின் உயரதிகாரிகள் கொழும்பு வரவுள்ளனர்.

இதேவேளை புதிய அரசின் முதலாவது வரவு - செலவுத் திட்டத்தில் கூடுதலான துண்டு விழும் தொகை ஏற்படும் என எதிர்பார்க்கப்படுவதாகவும், இது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஒன்பது சதவீதமாக இருக்குமென கருதுவதாகவும் நிதியமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

சிறிலங்காவிற்கு உதவி வழங்கும் நாடுகள் குழுவின் கூட்டம் அடுத்த வருடம் ஏப்ரலில் பாரிசில் நடைபெறவிருக்கின்றது. இதற்கு முன்னோடியாகவே சிறிலங்காவின் நிதி விவகாரங்களையும் செலவினங்களையும் நேரில் ஆராய உதவி வழங்கும் நாடுகளின் பிரதிநிதிகள் கொழும்பு வரவுள்ளதாக தெரிய வருகின்றது.

இத்தகைய நிலையில் பாதுகாப்புச் செலவினங்களுக்காக மேலும் நிதியை ஒதுக்கீடு செய்வதன் பின்விளைவுகள் உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் சிறிலங்காவுக்கு பாதகமாக இருக்கும் என பொருளாதார வல்லுனர்கள் தெரிவித்துள்ளனர்.

# ஜனாதிபதி தேர்தலைப் பகிஷ்கரிக்க ஐ. தே. கவிடம் கோரினேன்

### ஹமீத் தெரிவிப்பு

ஜனாதிபதி தேர்தலில் ஐ.தே.க. போட்டியிடக் கூடாது என நான் கூறினேன் எனது இக்கருத்துக்கு ரொனி டி மெல்லும் ஆதரவு தந்தார். இவ்வாறு முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ஏ.சி.எஸ். ஹமீட் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் பிரேரணை ஒன்றின் மீதான விவாதத்தில் உரையாற்றும் போது அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், ஜனாதிபதித் தேர்தலில் அரசாங்கம் வெற்றி பெறும் என நிச்சயமாக தெரிந்த நிலையில், இவ்வாறான தோல்வியை ஏற்றுக் கொண்டது தேவையற்ற விடயம் எனவும் அவர் கூறியுள்ளார்.

# பிரதி அமைச்சர்களுக்கு 17 ஆயிரம் ரூபா அலவன்ஸ்

(கொழும்பு)

புதிதாக நியமிக்கப்பட்டுள்ள பிரதி அமைச்சர்களுக்கு மாதாந்த அலவன்சாக 17 ஆயிரம் ரூபா வழங்கப்படவுள்ளது இதற்கான அங்கீகாரம் பாராளுமன்றத்தில் கோரப்பட்டுள்ளது.

## மீண்டு(ம்) வாருங்கள்

வீரர்களே ... மா வீரர்களே ... புது —
வேதங்கள் பாடி வீழ்ந்து மடிந்திட்ட ... எம்மை
தாங்கியிருந்திட்ட தோளங்களே ...
நேற்றிருந்தீர்கள் எம்மோடு
நின்று வாழ்ந்தீர்கள்
எங்கு போனீர்கள் ... எங்கு போனீர்கள்
எம்மை ஏங்கியழவைத்து
எங்கு போனீர்கள்.
கூடி உண்டீர்கள்... எம்மோடு
கூடயிருந்து பகையழித்தீர்கள் ... எம்மை
கூடியழவிட்டு எங்கு போனீர்கள்?

நேற்றைய கார்த்திகை நிலவொளியில் ... நாம்
தேற்ற முடியாத தேம்பினீர்கள் .. உம்
மடிமீது உயிர் துறந்த தோழரையெண்ணி
துவண்டழுதீர்கள் ......
வந்து விட்ட கார்த்திகையில் ... எம்மை
வழியில் விட்டு எங்கு போனீர் ...
வெந்து போகுதுள்ளம்... மீண்டும்
வந்திட மாட்டீரோ! ??

சண்டைக்கென்று கூறி ... எம்மை
கட்டியணைத்து கண்மலர்ந்திட்டு
கையசைத்துமே போனீர்கள் ... உங்கள்
பட்டு முகங்களில் பாசம் மிகுந்திட
பார்த்துப் பார்த்துமே போனீர்கள்.
வீழ்வு தெரிந்திட்டும் வீரத்தோடு நீர்
விடைகொடுத்துமே போனீர்கள் ... உங்கள்
வீழ்வு கேட்டு நாம் விம்மியழுகிறோம் .. எங்கள்
விம்மல் தணித்திட வாரீரோ ...

பார்த்திருக்கின்றோம் ... நீங்கள்
படுத்துறங்கும் இடத்தில் நின்று..
பார்த்திருக்கின்றோம்
மாண்டுபோன தோழர்களே
மீண்டும் வாருங்கள் .. மீண்டு வாருங்கள்
எம்மை மீட்க வாருங்கள்......

அடம்பனூர் செ. திருமாறன்

# மாவீரர் வாரத்தையொட்டி வீரவணக்க கூட்டங்கள்

மாவீரர் வாரத்தையொட்டி இன்றிரவு 7-30 மணிக்கு வீரவணக்கக் கூட்டங்கள் இடம்பெறும் விபரம்: யாழ் வட்டத்தில் வண்ணை வரதராஜபெருமாள் கோவிலடி உடுவில் வட்டத்தில் மல்லாகம் பிள்ளையார் கோவில் முன்றல், சங்கானை வட்டத்தில் வட்டுக்கோட்டை திருஞானசம்பந்தர் வித்தியாசாலை, சாவகச்சேரி வட்டத்தில் மட்டுவில் நுணாவில் சரஸ்வதி கனிஷ்ட வித்தியாலயம், கைதடி வட்டத்தில் நாவற்குழி மகாவித்தியாலயம், உடுப்பிட்டி வட்டத்தில் வல்வெட்டி அ. த. க. பாடசாலை என்பவற்றில் நடைபெறும்.

# வடமராட்சியில் உணர்வு பூர்வ மாவீரர் வார அனுஷ்டிப்பு

(வடமராட்சி)

வடமராட்சியில் மாவீரர் வாரம் உணர்வு பூர்வமாக எழுச்சியுடன் அனுஷ்டிக்கப்படுகிறது: திங்கள் காலை 9.00 மணிக்கு வைபவரீதியாக மாவீரர் வார நிகழ்வுகள் ஆரம்பமாகின-

வடமராட்சிக் கோட்டத்தில் ஐந்து பிரதான பந்தல்கள் அமைக்கப்பட்டு அவ்வப் பகுதியைச் சேர்ந்தவர்களது உருவப்படங்கள் பந்தல்களில் வைக்கப்பட்டு மலரிட்டு மாவீரர்களின் உருவப்படங்களுக்கு மக்கள் மரியாதை வணக்கங்களை செலுத்தினர்-

பருத்தித்துறை வட்டத்திற்கு கிராமக் கோட்டடியில் பிரதான பந்தல் அமைத்து அவ்வட்டத்தில் வீரச்சாவடைந்த 130 மாவீரர்களது படங்கள் வைக்கப்பட்டன- கரவெட்டி வட்டத்திற்கு நெல்லியடி மத்தியமகா வித்தியாலயத்திற்கும் அருகாமையில் பந்தல் அமைத்து அப்பகுதி 90 மாவீரர்களது படங்கள் வைக்கப்பட்டன- உடுப்பிட்டி வட்டத்திற்கு உடுப்பிட்டி சந்தியில் அமைக்கப்பட்ட பந்தலில் அப்பகுதியைச் சேர்ந்த பல மாவீரர்களது படங்கள் வைக்கப்பட்டு மக்கள் அஞ்சலி செலுத்தினர்-

அதே போன்று வடமராட்சி வடக்கு கடற்புலிகள் பிரதேசத்தில் வீரச்சாவடைந்த 73 மாவீரர்களது படங்கள் பருத்தித்துறை பழைய பஸ் தரிப்பு நிலையத்தில் அமைக்கப்பட்ட பந்தலில் வைக்கப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது- வடமராட்சி கிழக்கு கடற்புலிகள் பிரதேசத்தில உடுத்துறை பகுதியில் பந்தல் அமைக்கப்பட்டு மாவீரர்களது படங்கள் வைக்கப்பட்டன-

மேற்குறித்த ஐந்து பந்தல்களிலும் விடுதலைப் புலிகள் உறுப்பினர்களால் தேசியக் கொடிகள் ஏற்றப்பட்டன- இதே போன்று விடுதலைப் புலிகளின் அலுவலகங்கள், போராளிகள் பாசறைகள், மாதர் அபிவிருத்திச் சங்கங்கள், தொழிற்சங்கங்கள், பொது நிறுவனங்கள், சனசமூக நிலையங்கள், அரச அலுவலகங்கள், பாடசாலைகள், வங்கிகள், திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் ஆகிய இடங்களில் விடுதலைப் புலிகள் உறுப்பினர்களாலும், அரச உயர் அதிகாரிகளாலும், [illegible] உத்தியோகத்தர்களாலும், தலைவர், செயலாளர்கள் என்போரும் தமிழீழ தேசியக் கொடியை தேசிய கீதம் இசைக்க ஏற்றி வைத்தனர்-

வடமராட்சிப்போராட்டத்தைச் சித்திரிக்கும் பத்துக்கு மேற்பட்ட வீதி வளைவுகள் அமைக்கப்பட்டுள்ளன- வீதிகள் எங்கும் சிவப்பு, மஞ்சள் நிறக் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளன- கண்ணைக் கவரும் வண்ணக் கொடிகள் வீதிகள் தோறும் அசைந்து கொண்டிருந்தன- வீதிகளில் வர்த்தக நிலையங்கள், வீடுகள் பலவும் மாவீரர் வார பதாகைகள் கட்டி அலங்கரிக்கப்பட்டுள்ளன-

பாடசாலைகள் மட்டத்தில் வகுப்புகள் ஆரம்பமாவதற்கு முன்னர் மாவீரர்கள் நினைவாக ஆசிரியர்கள், அதிபர்கள் கருத்துரைகள் வழங்கினர்- (யோ)

# தேசியப்பட்டியல் வெற்றிடம் ஐ. தே. க. குழு ஆராயும்

(கொழும்பு)

ஜனாதிபதி தேர்தல் வன்செயல் சம்பவங்கள் தொடர்பான முழுமையான தகவல்கள் திரட்டப்பட்ட பின்பே தேர்தல் ஆட்சேப மனு தாக்கல் செய்யப்படும் என ஐ. தே. க பொதுச் செயலாளர் காமினி அத்துக்கோரள தெரிவித்துள்ளார்.

இதேவேளை வெற்றிடமாகவுள்ள ஐ. தே. க தேசியப்பட்டியல் இடங்களுக்கு யாரை நியமிப்பது என்பது பற்றி ஆராய ஏ. சி. எஸ். ஹமீட், கே. என். சொக்ஸி, தயா வல்பொல, பி. தயாரத்ன, கே. வேலாயுதம் ஆகியோரைக் கொண்ட குழுவொன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

# யாழ். செஞ்சிலுவைச் சங்கத்திற்கு நிதிஉதவி இடைநிறுத்தம்

## கணக்குகளில் திருப்தியின்மை காரணம்

யாழ்ப்பாணம்

இலங்கை செஞ்சிலுவைச் சங்க தலைமை அலுவலகம் அதன் யாழ்ப்பாண கிளையின் கணக்குகளில் திருப்தியின்மையால் இதற்கான நிதி உதவிகளை இடைநிறுத்தியுள்ளது. இவ்வாறு கொழும்பு தலைமை அலுவலகத்தில் இருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த காலத்தில் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் கொழும்பு தலைமை அலுவலகத்தினால் வடபகுதி மக்களிற்கு விநியோகிக்கவென 12லட்சம் ரூபாவிற்கான பனடோல் மருந்தும் ஏழு லட்சம் ரூபா வெள்ள நிவாரண உதவியும் யாழ்ப்பாண கிளையிற்கு வழங்கியிருந்தது. இதில் நான்கு லட்சம் ரூபா பெறுமதியான பனடோலிற்கான கணக்கு மட்டும் தலைமைச் செயலகத்திற்கு யாழ் கிளையிடமிருந்து கிடைக்கப்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. மிகுதி 15லட்சம் ரூபாவிற்குமான கணக்குகளை சமர்ப்பித்ததன் பின்பே தொடர்ந்து யாழ் கிளைக்கு தம்மால் உதவிகளை வழங்க முடியும் என கொழும்பு தலைமை அலுவலகத்தினால் யாழ் கிளையினரிற்கு தெரிவிக்கப்பட்டுள்ளதாக கொழும்பு தலைமை அலுவலக செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன. (இ நி)

---

# தேவை

## களஞ்சியப்பகுதி எழுதுவினைஞர்

களஞ்சியப் பகுதியில் கடமையாற்ற ஆண் எழுதுவினைஞர் ஒருவர் தேவை

க. பொ. த. (உ/த) பரீட்சையில் வர்த்தகவியலில் சித்தியெய்தியவராகவோ அல்லது ஏற்கனவே கணக்கியல் துறையில் அனுபவம் உள்ளவராகவோ இருப்பது விரும்பத்தக்கது.

**வயது: 25 - 45 வருடங்கள்**

**சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.**

28-11-94 காலை 10 00 மணிக்கு கல்வித் தகைமைச் சான்றிதழ்களுடனும் வேலை அனுபவச் சான்றிதழ்கள் இருப்பின் அவற்றுடனும் ஈழநாதம் பணிமனைக்கு நேரில் சமுகம் தரவும்.

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி,
யாழ்ப்பாணம். (இ)

---

தீவக கோட்ட கூட்டுறவாளர் நடத்தும்

# மாவீரர் தின விழா

## 1994 நவம்பர் 27

காலம்: 24.11.1994-ம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 3.00 மணி

இடம்: யாழ். இந்து மகளிர் கல்லூரி (சிவ. விசாலாட்சி மண்டபம்)

புங்குடுதீவு - நயினாதீவு, வேலணை, ஊர்காவற்றுறை, காரைநகர் பல நோ.கூ. சங்கங்களுடன் இணைந்து தீவக கூட்டுறவாளர்கள் நடத்தும் மாவீரர் தின விழா தீவக கோட்ட கூட்டுறவு ஒன்றியத் தலைவர் திரு. ப. கனகலிங்கம் அவர்கள் தலைமையில் நடைபெறவுள்ளது. இவ்விழாவில் அனைத்துச் சங்கங்களின் அங்கத்தவர்கள், பொதுச்சபை பிரதிநிதிகள், நெறியாளர்கள், கூட்டுறவாளர்கள், பணியாளர்கள் அனைவரையும் கலந்து கொண்டு சிறப்பித்து மாவீரர்களை நினைவு கொள்ள அன்புடன் அழைக்கிறோம்.

தீவக கோட்ட கூட்டுறவு ஒன்றியம்,
தீவக கோட்டம்.

(சி-10766)

---

# வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபை . கரவெட்டி

# கேள்வி அறிவித்தல் - 1995

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபை எல்லைக்குட்பட்ட சந்தைகள், இறைச்சிக் கடைகள், பைசிக்கிள் பாதுகாப்பு நிலையம் ஆகியவற்றை 1995 ஆம் ஆண்டு தைமாதம் முதலாம் திகதி தொடக்கம் 1995ஆம் ஆண்டு மார்கழி மாதம் 31ஆம் திகதிவரை குத்தகைக்கு விற்பனை செய்வதற்கு அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் 12-12-94 முற்பகல் 10-00 மணிவரை வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபையின் நெல்லியடி தலைமை அலுவலகத்தில் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப் பத்திரங்கள் யாவும் அவ்வவ் உப-அலுவலக பொறுப்பதிகாரிகளால் 9-12 94 நண்பகல் 12-00 மணிவரை வழங்கப்படும்.

மேலும் கேள்விகள் தொடர்பாக மேலதிக விபரங்களையும், நிபந்தனைகளையும் உப-அலுவலகங்களில் அல்லது தலைமை அலுவலகத்தில் அறிந்து கொள்ளலாம்.

செ. ஸ்ரீநிவாஸன்
விசேட ஆணையாளர்,
வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபை,
கரவெட்டி.

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபை,
கரவெட்டி, 21-11-1994. [9862]

---

# மாற்றிக் கொள்ளவும்

22-11-94 செவ்வாய்க்கிழமை கொழும்பிலிருந்து வரும்போது எனது பிரயாணப்பை கொடிகாமத்தில் வைத்து மாறி எடுத்துச் செல்லப்பட்டது றேடியோ கசற் நாடாக்கள் அடங்கிய அவர்களுடைய பிரயாணப்பை ஏனைய பொருட்களுடன் யாழ். பஸ் நிலையத்தில் உள்ள சிற்றூர்தி சேவைச் சங்க இணைய காரியாலயத்தில் என்னால் ஒப்படைக்கப்பட்டுள்ளது. எனது பிரயாணப்பையை மாறி எடுத்துச் சென்றவர் அதனை இணையக் காரியாலயத்தில் ஒப்படைத்து அவர்களினதைப் பெற்றுச் செல்லுமாறு கேட்டுக் கொள்கிறேன்;

[10191]

---

## மாணவர் உணவு முத்திரை

வேலணை பிரதேச செயலகத்துக்குட்பட்ட பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்கள் (1976 தொடக்கம் 1989ஆம் ஆண்டு வரைக்கும் பிறந்தவர்களுக்கு) மேலதிக மாணவர் மதிய உணவு முத்திரை வழங்குவதற்கு சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபர்களிடம் பிறந்த திகதியை குறிப்பிட்டு அத்தாட்சிக் கடிதம் பெறப்பட்டு இக்கடிதத்தை இவர்களது கிராம அலுவலருக்கு சமர்ப்பிக்குமாறு வேலணை பிரதேச செயலர் திருமதி ப. திலகநாயகம் அறிவித்துள்ளார்.

---

## சிறந்த

நடாத்துவதற்கு மதிப்பீட்டை மேற்கொள்வதற்கு தமிழீழ நிர்வாகசேவையின் மதிப்பீட்டுக்குழுவினர் வருகைதரவுள்ளனர் இம்மதிப்பீட்டுக்குழுவினால் பின்வரும் விடயங்கள் கவனத்திற் கொண்டு மதிப்பீட்டுப் புள்ளிகள் வழங்கப்படும். வீதிப் பாவனையாளர்களின் பாதுகாப்பிற்கும் சௌகரியத்திற்கும் பாதகமில்லா மல் வளைவுகள் அமைந்திருத்தல் வேண்டும் வடிநீர், வீதிக்கு உரித்தான மைல் கட்டை, விளக்குத் தூண், வழிகாட்டி, பாலம் முதலியன மேல் தாங்காது வளைவு அமைந்திருக்க வேண்டும்; வீதி ஓரங்களில் உள்ள மரங்கள், வேலி, மதில் போன்றவற்றில் வளைவு அமைப்பில் பாவிக்கக் கூடாது.

சுதந்திரப் போராட்டத்தை பிரதிபலிக்கும் தன்மையையும், மக்கள் மனதில் விழிப்புணர்வையும், மாவீரர்களின் சாதனைகளையும் புதிய சிந்தனைக் கருக்களையும் பிரதிபலிக்கக்கூடியதாக அமைதல் வேண்டும்.

இப் பரிசுத் திட்டம் காலப்போக்கில் ஏனைய மாவட்டங்களுக்கும் விஸ்தரிக்கப்படும் என நிர்வாக சேவையினர் அறிவித்துள்ளனர்.

---

## உருவப்படம் திறந்து வைப்பு

கப்டன் மணிவண்ணன், 2-ம் லெப். இசைவாணன் ஆகியோரது உருவப்படங்கள் நேற்றுக் காலை 10-30 மணியளவில் நாவாந்துறை சந்தியடியிலுள்ள மாவீரர் பூங்காவில் கடற்புலிகளின் (யாழ்மாவட்டம்) அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு: மு. வே. யோ. வாஞ்சிநாதன் அவர்களால் திறந்துவைக்கப்பட்டது.

கடற்புலிகளின் நாவாந்துறைச் சிறறூர்ப் பொறுப்பாளர் திரு மதிவாணனின் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் ஈகச்சுடரை கடற்புலிகளின் வலிகாமம் கிழக்கு வட்டப் பொறுப்பாளர் திரு தேவநேசன் அவர்களும், நாவாந்துறை வர்த்தகசங்கத்தலைவர் திருலிங்கம் அவர்களும் ஏற்றிவைத்தனர்

திரு எட்வர்ட், திரு மலக்கியாஸ் ஆகியோருடன் கடற்புலிகளின் அரசியல் துறை (யாழ் மாவட்டம்) பொறுப்பாளர் திரு மு. வே. யோ. வாஞ்சிநாதன் அவர்களும் சிறப்புரையாற்றினார். மாவீரர்களின் திருவுருவப் படங்களுக்கு பெற்றோரும், உறவினர்களும் மலர்மாலை அணிவித்தனர்.

---

## மாவீரர்

லும் இல்லமும் அதற்குச்செல்லும் வீதிகளும் மின்சார ஒளி பாய்ச்சப்பட்டு ஒரே ஒளி வெள்ளமாகக் காணப்படுகிறது.

சுன்னாகத்தில் அமைக்கப்பட்டுள்ளமாவீரர்நினைவுப்பந்தல் மற்றும் தாவடியிலுள்ள பொருண்மிய மேம்பாட்டுநிறுவனபகுதி. கொக்குவில் இந்துக் கல்லூரியிலுள்ள திருகோணமலை மாவட்ட மாவீரர்பந்தல், திருநெல்வேலி பகுதி. யாழ் நகரப்பகுதி, தமிழீழ நிர்வாகசேவை அலுவலகம் அமைந்துள்ள பகுதி, யாழ் மாவட்ட அரசியல் துறை செயலகப் பகுதி, சங்கானை ஆகிய பகுதிகளிலும் மேலும் பல இடங்களிலும் சிறப்புற மின் அலங்காரங்கள் செய்யப்பட்டுள்ளன.

---

## மரம் நடுகை

மாவீரர் வாரத்தை முன்னிட்டு யாழ் றோட்டரக்ட் கழகத்தால் யாழ் மாநகர சபை அனுசரணையுடன் யாழ் மடம் வீதியில் இன்று மரநடுகைச் செயற்திட்டம் நடைமுறைப் படுத்தப்படுகின்றது நேற்றும் மரநடுகை இடம்பெற்றது

---

# உஆம் ஆண்டு நினைவலைகள்



மேஜர் தமிழரசன் (டொச்சன்)
(கந்தசாமி ஜெயக்குமார்)
(புன்னாலைக்கட்டுவன் வடக்கு)

தாயின் மடியில்: 21-02.1966 — தமிழவர் மனங்களில் 24.11.1992

உன் கனவுகள் நினைவாகட்டும்
உன் இலட்சியம் நிறைவேறட்டும்
இந்த மண்ணைக் காத்த வீரனே
உன் நினைவு எம்மைவிட்டு அகலாது

உரும்பிராய் கிழக்கு.
ஞான வைரவர் வீதி,
உரும்பிராய். (சி-10767)

நியூட்டன்
குடும்பத்தினர்

---

## 6 செய்தியாளர் யாழ். விஜயம்

பி. பி. ஸி: ராய்ட்டர் உட்பட ஆறு செய்தி ஸ்தாபனங்களின் செய்தியாளர்கள் இன்று யாழ்ப்பாணம் வருகின்றனர்

வடபகுதியின் தற்போதைய நிலைமைகள் குறித்தும், மாவீரர் வார நிகழ்வுகள் குறித்தும் தேவையான தகவல்களைத் திரட்டிக்கொள்ளும் நோக்குடனேயே இச் செய்தியாளர் குழு இன்று இங்கு வருகின்றது.

---

## சமாதானத்

ங்கள் சமாதான முயற்சிக்கு தடங்கலை ஏற்படுத்தும் என்றும் அவை அவ்வளவு விரும்பத்தக்க ஒரு நடவடிக்கையாக கொள்ள முடியாது எனவும் சந்திரசேகரன் சுட்டிக்காட்டினர்.

ஒருதலைப்பட்சமாக யுத்த இடைநிறுத்தம் ஒன்றை மேற்கொண்ட நிலையில் விடுதலைப் புலிகளின் உறுப்பினர் மீது தாக்குதல் நடத்தப்பட்டதை சந்திரசேகரின் இவ் கருத்து சுட்டிகாட்டக்கூடும்

---

## கிழக்கு

உடைத்தனர் பின்னர் அதனை உழவுயந்திரம் மூலம் கட்டியிழுத்து முற்றாக அழித்துள்ளனர்.

முத்தன் ஊமையத்தை (மூன்று பிள்ளைகளின் தாய்) என்பவரது வீட்டுக்கே இக்கதி நேர்ந்தது இந்த வீட்டின் உரிமையாளர் இராணுவத்தினரால் முன்னரே கொல்லப்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

---

## இரண்டாம்

ளார்.

நேற்று லண்டன் பி. பி. ஸியின் சிங்கள சேவையான சந்தேசிய வானொலிக்கு வழங்கிய பேட்டியில் சமாதான ப்பேச்சுகள் தொடர்பாக தற்போதைய நிலை என்ன என வினாவிய போது மேற்கண்ட பதிலை அளித்துள்ளார் வடக்கு-கிழக்கு யுத்தத்திற்கு ஓர் தீர்வைபேச்சுவார்த்தைமூலம் ஏற்படுத்த முதல் கட்ட பேச்சுக்கள் நடைபெற்றதாகவும் இரண்டாம் கட்டம் தொடர்பாக இன்னும் எந்தவித ஆரம்ப நடவடிக்கைகூட நடைபெறவில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இரண்டாம் கட்டப் பேச்சு குறித்து இதுவரையில் அரசாங்கம் எவ்வித அறிவுறுத்தல்களையும் தமக்கு வழங்கவில்லை என அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

---

## மாவீரர் வாரத்தை

யார், கூட்டுத்தாபன, கூட்டுறவுத்துறை ஊழியர்கள், தனியார் ஸ்தாபனங்கள், வர்த்தகர்கள், பொதுமக்கள், நலன் விரும்பிகள் அனைவரும் இந் நிதியத்தின் அங்கத்தவராகலாம்.

இம் மாவீரர் நிதியத்தின் சகல முகாமைத்துவ தத்துவங்களும் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறையைச் சார்ந்ததாகும். அதன் நடைமுறைச் செயற்பாடுகள் அனைத்தும் தமிழீழ நிர்வாக சேவையின் பொறுப்பாகும். இந் நிதியத்தின் பாதுகாவலராக தமிழீழ வைப்பகம் செயற்படும். இந் நிதியத்திற்கு நன்கொடைகளை வழங்கும் நலன் விரும்பிகள் 903 இலக்க கணக்கில்1994-11-26 ஆம் நாள்தொடக்கம் ஆரம்பிக்கலாம். இக் கணக்கு அன்றைய தினம் மு. பகல் 11 மணிக்கு வைபவ ரீதியாக ஆரம்பிக்கப்படும். இவ் வைபவத்திற்கு அனைவரையும் தமிழீழ வைப்பகத்திற்கு அணிதிரண்டு இம் மகத்தான சேவைக்கு ஒத்துழைப்பும், ஒத்தாசையும் வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

## ஐ தேக

மாகாணம், வட மத்திய மாகாணம் என்பவற்றை உள்ளடக்கிய பிரதேசத்தில் நிகழ்ந்த சம்பவங்கள் குறித்து ஒரு குழுவும். மத்திய சப்பிரகமுவா, தென் மாகாணங்களில் நிகழ்ந்த சம்பவங்கள் குறித்து ஒரு குழுவும், திருகோணமலை மட்டக்களப்பு மற்றும் வட மாகாணத்தில் இடம்பெற்ற சம்பவங்கள் குறித்து மற்றுமொரு குழுவும் விசாரணைகளை மேற்கொள்ளும்.

ஓய்வுபெற்ற நீதிபதிகளும், திறமைசாலிகளான அனுபவம் வாய்ந்த நிர்வாகிகளும் இவற்றில் பணிபுரிவதற்கு நியமிக்கப்படவுள்ளனர்;

---

# 2-ம் ஆண்டின் நீங்கா நினைவுகள்



**2.ம் லெப். கௌரி (வீரசக்தி அழகினி)**

தாயின் மடியில் 03-05-73 — ஈழத்தாயவள் மடியில் 24-11-92

அரக்கர் அட்டூழியத்தால் துவண்டாய்
வீறு கொண்டாய் வேங்கையானாய்
களம் பல சென்று வரலாறு படைத்தாய்
தொடர்க உன் பணியென
வாழ்த்தி நின்ற வேளை
மாவீரரை பூஜித்திருந்த நன்னாளிலே
விடுதலைக்கு உரமானாய்
இன்று தேடுகின்றோம் உனை-கல்லறைக்குள்ளே

குடும்பத்தினர்,
நண்பர்கள்.

ஆவரங்கால். (10190)

---

# மரண அறிவித்தல்கள்

## வைத்தி செபமாலை

மாகியப்பிட்டியைச் சேர்ந்த வைத்தி செபமாலை அவர்கள் 23-11-1994 நேற்று காலமாகி விட்டார். இவர் பிலோமினம்மாவின் அன்புக் கணவரும் தேவபாலன் (சவூதி அரேபியா) வேதபாலன் (டோகா), சந்தண றோசா, வரதராணி, புஸ்பராணி ஆகியோரின் அன்புத் தந்தையும் விநாயகமூர்த்தி, பிரான்சிஸ், செல்வராசா, கன்டிடா ஆகியோரின் அன்பு மாமனாரும் மேரி நிறாஜினி, நெமோன், டெனிஸ்குமார், சஜந்தினி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 24-11-1994 இன்று பிற்பகல் 2. 00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெறும் இவ்வறிவித்தலை உற்றார். உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்;
கன்டிடா (அன்பு)
(மருமகன்)

மாகியப்பிட்டி,
சண்டிலிப்பாய். (10193]

---



## திருமதி மயில்வாகனம் செல்லம்மா

மீசாலை கிழக்கைச் சேர்ந்த ஓய்வு பெற்ற அதிபர் மயில்வாகனத்தின் அன்புப் பாரியார் செல்லம்மா அவர்கள் 22-11-94 அன்று காலமானார்.

இவர் கொடிகாமம் செல்வலட்சுமி, சின்னத்தங்கம் ஆகியோரின் அருமைச் சகோதரியும், பாக்கியலீலா, சந்திரலீலா, சோதிமலர், யோகேஸ்வரன் (கனடா), லோகேஸ்வரன் (கனடா), ஜெகதீஸ்வரன் (கனடா), ரவி (சாவகச்சேரி பல நோக்கு கூட்டுறவு சங்கம்), ராதை, சுகுமார் (சுவிஸ்) ஆகியோரின் அருமைத் தாயாரும், காலஞ்சென்ற கயிலாயபிள்ளை (ஆசிரியர் யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி), முத்துக்குமார் (கனடா), வைரவநாதன் (யாழ் போதனா வைத்தியசாலை, தாதி உத்தியோகஸ்தர்), வதனி (கனடா), சாந்தி (கனடா), கோமதி (கனடா), ஆனந்தராஜினி, கணேசமூர்த்தி (பிரதேசசபை, துணுக்காய்) ஆகியோரின் அன்பு மாமியாரும், மார்க்கண்டு (ஓய்வுபெற்ற அதிபர்), சதாசிவம் (ஓய்வுபெற்ற நகரசபை மேற்பார்வையாளர்), கற்பகம், காசிப்பிள்ளையின் மைத்துனியும், திருமதி கௌரி (ஓய்வுபெற்ற ஆசிரியர்) திருமதி பொன்னம்மா ஆகியோரின் ஒன்றவிட்ட சகோதரியுமாவார்.

அன்னாரின் இல்லத்தில் 24-11-94 இன்று அபரக்கிரியைகள் இடம்பெற்று காலை 10 மணிக்கு சாவகச்சேரி, கண்ணாடிப்பிட்டி மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும். இத்தகவலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்,

தகவல்:
கணவன், பிள்ளைகள்,
மருமக்கள்

"பூம்புகார்"
மீசாலை கிழக்கு,
மீசாலை; (10185)

---

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 24-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது;